# கவிஞர் தாகூர்

டாக்டர் மு. வரதராசன், எம்.ஓ.எல்., பிஎச்.டி.

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை

# கவிஞர் தாகூர்

3327

PRESENTED BY
V. PR. PL. M KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

டாக்டர் மு. வரதராசன்

பாகனேரி.

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை

முதற் பதிப்பு ; நவம்பர் 1949
உரிமை ஆசிரியர்க்கு

சாதாரணப் பதிப்பு 0-14-0
உயர்ந்த பதிப்பு 1-4-0

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை சென்னை

# முன்னுரை

உலகில் கலைத்தொண்டு ஆற்றிய கலைஞர் பலர்; ஆயினும் உயர்ந்த குறிக்கோள் கொண்டு தம் வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக்கொண்டு உலகத்தார்க்கு வழி காட்டிகளாக வாழ்ந்த கலைஞர் ஒரு சிலரே. கவிஞர் ரவீந்திரநாத தாகூர் இத்தகைய சிறந்த கலைஞர் சிலருள் ஒருவர்.

'கவிஞர் தாகூர் கலைஞர்களுள் சிறந்து விளங்கக் காரணம் அவர் பெற்ற கலையுணர்வுமட்டும் அன்று; அதற்கு அடிப்படையாக விளங்கிய மெய்யுணர்வுமாகும். வெறுங் கலையுணர்வும் வெறுந் தத்துவ ஆராய்ச்சியும் யார்க்கும் பயன்படுவதில்லை. கலையுணர்வும் மெய்யுணர்வும் ஒருங்கே பெற்ற வாழ்வே உலகிற்குப் பயன்படும் வாழ்வாகின்றது. கவிஞர் தாகூரின் வாழ்க்கை வரலாறு இதனை விளக்குகின்றது.

கவிஞர் தாகூரின் வாழ்க்கை மாணவர்களின் நெஞ்சில் பதிய வேண்டும்; அது அவர்களுடைய எதிர்காலத்தைச் சீர்ப்படுத்த வல்லதாகும்; இந்த நம்பிக்கையாலேயே இந்த நூலை மாணவர்களுக்காக எழுதலானேன். என் முயற்சிக்குத் துணைபுரிந்து இதனை அச்சிட்டு வெளியிட்ட பாரிநிலையத்தார்க்கு நன்றி செலுத்துகின்றேன்.

மு. வ.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இளமை | ... 5 |
| 2. | வாழ்க்கை அமைப்பு | ... 19 |
| 3. | தொண்டு | ... 37 |
| 4. | பெருவாழ்வு | ... 47 |
| 5. | உள்ளத்தின் ஒளி | ... 65 |

# 1. இளமை

## நாட்டின் புகழ்

இந்தியா உலகப் புகழ் பெறுவதற்குக் காரணம் தாஜ்மஹால் போன்ற சிறந்த கட்டிடங்கள் மட்டும் அல்ல ; இமயமலையும் கங்கையாறும் சென்னைக் கடற்கரையும் போன்ற இயற்கைப் பெருமைகள் மட்டும் அல்ல ; பல நூற்றுண்டுகளாக இந்த மண்ணில் பிறந்து வளர்ந்து புகழொளி பரப்பிவரும் பெருமக்களே பெரிய காரணம் ஆவார்கள். உண்மையை ஆராய்ந்தால், இயற்கைப் பெருமைகளும் செயற்கைச் சிறப்புக்களுமான மலை கட்டிடம் முதலியவற்றைவிட, அழியாப் புகழைத் தேடித் தருகின்றவர்கள் இப்பெருமக்களே ஆவார்கள்.

## பிறப்பும் வளர்ப்பும்

கல்கத்தா நகரில் தாகூர் என்னும் பெயருடைய செல்வாக்கான நற்குடியில் 1861-ம் ஆண்டில் ரவீந்திர நாத தாகூர் பிறந்தார். அவருடைய தந்தையார்

தேவேந்திரநாத தாகூர் என்பவர் உயர்ந்த பண்புகள் வாய்ந்த சான்ருேராய்த் திகழ்ந்தவர். அவருக்குப் பதினன்காம் குழந்தையாக, கடைசி மகனுகப் பிறந் தவர் ரவீந்திரர்.

தந்தையார் தேவேந்திரநாத தாகூர் ஆடம்பாத்தை வெறுத்தவர்; ஆகையால் தம் மக்களை எளிய முறையில் வளர்த்துவந்தார். ரவீந்திரரும் விளையாட்டுப் பொருள் களைப் பெருக்கிக்கொண்டு ஆடம்பரச் சூழ்நிலையில் வளரவில்லை. விளையாட்டுக்கு உரியவற்றைத் தாமே படைத்துக்கொண்டு கற்பனையுலகில் பெரும்பொழுது போக்கிக் குழந்தை ரவீந்திரர் வளர்ந்தார். தந்தை யாரின் ஏற்பாடு இவ்வாறு நன்மையாகவே முடிந்தது. வெளியுலகமும் அக்குழந்தைக்கு நன்ருகத் தெரியாத படி, பெரும்பான்மையான நாட்கள் தோட்டத்திலும் முற்றத்திலும் விளையாடிக் காலம் கழிக்க நேர்ந்தது. வீட்டுவாயிலில் நின்றுகொண்டே தெருக்களில் வரு வார் போவாரையும் ஓடும் ஊர்திகளையும் கண்டதே ரவீந்திரர் குழந்தையாக இருந்து உலகைக் கண்டகாட்சி.

## கற்பனைவித்து

வீட்டினுள் வளர்ந்த அண்ணன்மார் முதலியவ ரோடு பழகவோ சிறுவனுக இருந்த ரவீந்திரருக்கு வாய்ப்பு இல்லை. தப்பித் தவறி அவர்கள் இருக்கும் இடத்தை நாடி அவர்களை நெருங்கினுலோ, “ நீ நல்ல

பையன் அல்லவா ? போ, போ. ஓடிப்போய் அங்கே விளையாடு " என்று தட்டிக் கொடுத்து அனுப்பிவிடுவதே அவர்களுக்கு இயற்கையாக இருந்தது. வேறு வழி இல்லாமையால், வேலையாட்கள் தங்கியிருந்த இடத்தை நாடிச்செல்வது வழக்கமாகிவிட்டது. அங்கே சிறு சிறு கதைகளை அவர்கள் சொல்வார்கள். சில கதைகளை எதுகைமோனை அமைத்துப் பாட்டுப் போல் நீட்டி நீட்டிச் சொல்லிவந்தார்கள். அவர்க்கு இத்தகைய கற்பனைவிருந்து அங்கே கிடைத்துவந்தது. சில நாட்களில் மாலைவேளையில் அன்னையின் அணைப்பிலோ அத்தையின் அருகிலோ இருந்து அவர்களிடமும் கதைகள் கேட்க முடிந்தது. கதைகளில் கேட்ட வீர உணர்ச்சிகளும் வியப்பான செயல்களும் ரவீந்திரரின் கற்பனைக்குப் பெரிய தூண்டுகோலாக இருந்து வந்தன.

தந்தையாரின் ஆபீசிலும் ரவீந்திரருக்கு இடம் உண்டு. அங்கே சிறுவர் ரவீந்திரருக்கு வேறு நாற்காலி தேவையாக இல்லை; ஆபீசில் கணக்கெழுதிவந்த கைலாசம் என்பவரின் தொடையே உட்காருமிடமாக இருந்துவந்தது. அங்கும் நல்ல நல்ல கதை விருந்து இருந்துவந்தது ; கணக்கெழுதுவோர் கதைகளையும் சொல்லிவந்தார்.

இந்தக் கதைகள் எல்லாம் ரவீந்திரர் தனியே இருக்கும்போது பயன்பட்டு வந்தன. அப்போது கற்பனை

யுலகம் உண்மையுலகமாக மாறிவிடும். அந்தக் கதை களில் நிகழ்ந்தவை எல்லாம் காட்சி காட்சியாக ரவீந் திரரின் மனக்கண்ணில் வந்து வந்து மறையும். தாழ் வாரத்தில் ஒருபக்கம் பயன்படாமல் கிடந்த பழைய பல்லக்கு ஒன்றும் இதற்குத் துணைசெய்தது. ரவீந்திரர் அதற்குள் சென்று உட்கார்ந்து கதவை மூடிக்கொள் வார். உடனே அவருடைய கற்பனையில் அந்தப் பல்லக்கு ஊர் ஊராகக் காடுகாடாகப் பாலைவனமெல்லாம் கடந்து செல்லும்; உள்ளே இருந்த சிறுவரோ பெரிய அரசராக மாறிவிடுவார்; பலர் கீழே புடைசூழ்ந்துவர, பல்லக்கில் தலைவராய் விளங்குவார். அவருடைய கற் பனையில் கடந்து செல்லவேண்டிய ஆறு குறுக்கே வருமானால், அதே பல்லக்கு, பல்லக்காக இருக்காமல் அழகான தெப்பமாக மாறிவிடும்.

## இயற்கையில் ஈடுபாடு

இளமையிலேயே ரவீந்திரருக்கு இயற்கையின் அழ கில் ஈடுபாடு இருந்தது. காலையில் பசும்புல்லில் காணும் பனித்துளி, துளிர்க்கும் புதிய இலைகள், வீசும் மெல்லிய பூங்காற்று, கமழும் நறுமணம், பெய்யும் மழை இவை யெல்லாம் அவருடைய குழந்தையுள்ளத்தை மிகவும் கவர்ந்தன. மழையைப் பற்றிய பாட்டைக் கேட் பதிலும் அவர்க்கு நிரம்ப மகிழ்ச்சி இருந்தது. அந்த வயதிலேயே அவர் மண்ணிலும் விண்ணிலும் எவ்

வளவோ கற்பனைகளை உணர்ந்தார். வேலையாட்கள் பந்தல் அமைப்பதற்காகக் கம்பங்களை நடும் பொருட்டுக் குழி தோண்டும்போது, பரபரப்போடு மண்ணின் ஆழத்தைப் பார்ப்பார்; இன்னும் ஆழத் தோண்டினால் என்ன என்ன புதுமைகள் கீழுலகத்தில் தோன்றுமோ என்று எதிர்பார்ப்பார். வேலைக்காரர் தோண்டாமல் நிறுத்தும் போது வெறுவார். வானத்தின் நீலப்பரப்பு அவர்க்கு வற்றாத விருந்தளிப்பதாக இருந்தது ; வானவெளியில் மிதக்கும் பருந்துகளின் கிரீச்சுக்குரல் அவருடைய செவி வழியாகப் பாய்ந்து கற்பனையைத் தூண்டி வந்தது. சில நாட்களில் தாழ்வாரத்தில் கற்பனைப் பள்ளிக்கூடம் நடைபெறும். அந்தக் கற்பனைப் பள்ளிக்கூடத்தில் அவரே ஆசிரியர் ; ஆசிரியத் தொழிலுக்கு அடையாளமாகச் சிறுவர் ரவீந்திரரின் கையில் ஒரு கோல் எப்போதும் விளங்கும். கோல் இல்லாமல் ஆசிரியரைக் கற்பனை செய்ய அவரால் முடியவில்லை. ஆனால் வளர்ந்து கவிஞராகிப் பள்ளிக்கூடம் அமைத்துத் தொண்டு செய்த காலத்தில் முதலில் நீக்கியது இந்தக் கோலைத்தான்.

## பள்ளிக்கூட வாழ்க்கை

மற்றச் சிறுவர் எல்லோரும் பள்ளிக்கூடம் போக, ரவீந்திரர் மட்டும் தனியாக வீட்டில் இருக்கும் நிலைமை வந்தது. அவருக்கு இந்தத் தனிமை பிடிக்காத காரணத்

தால், மற்றச் சிறுவரோடு தாமும் பள்ளிக்கூடம் போக விரும்பினார்; தம் விருப்பத்தைத் தெரிவித்துப் போராடினார்; வேண்டா என்று பெரியவர்கள் தடுத்தும் அவர் கேட்கவில்லை; வீட்டினுள் அடைபட்டுக் கிடப்பதைவிட, இப்படியாவது வெளியுலகில் திரியும் வாய்ப்பைப் பெறவேண்டும் என்று அவருடைய மனம் நாடியது. ஆனால், பிடிவாதத்தில் வென்று பள்ளிக்கூடம் போய்வரத் தொடங்கியபின், பள்ளிக்கூடம் வீட்டைவிடக் கொடிய சிறையாக இருப்பதை உணர்ந்தார்; வருந்தினார். பிற்காலத்தில் பள்ளிக்கூடத்தை அந்தமான்தீவு எனக் குறிப்பிடலானார். தொடக்கப்பள்ளிகளில் சிறுவர்களின் உள்ளத்தைக் கவரும் பகுதி ஒன்றும் இல்லாத காரணத்தால், அவர் அக்காலத்துத் தொடக்கப் பள்ளியை அவ்வளவு வெறுத்தார்.

ரவீந்திரருக்கு ஒன்பது வயது ஆனபோது படிப்புக் கட்டாயப்படுத்தப்பட்டது. அப்போது அவருடைய தந்தையார் ஊரில் இல்லை. ஹேமேந்திரநாதர் என்னும் இருபத்தைந்து வயதுள்ள அண்ணன் அந்தப் பொறுப்பை ஏற்றார்; வீட்டில் சிறுவர்கள் நாள்தோறும் ஓயாமல் படித்துவரும்படி வற்புறுத்தினார். வீட்டிலே ஓர் ஆசிரியர் காலை ஏழுமணிக்கே வந்து தனிப்பாடம் கற்றுக்கொடுத்தார். அக்காலத்தில் வங்காளத்தில் எந்தப் பாடத்தையும் ஆங்கிலத்தில் கற்பிக்கும் அந்நிய

மோகம் இருந்துவந்தது. ஆனாலும் ஹேமேந்திர நாதர் வங்காளி மொழியிலேயே கற்பிக்குமாறு ஏற்பாடு செய்தார். ரவீந்திரருக்கு இது பெரிய நன்மை ஆயிற்று.

உடற்பயிற்சி காலையிலும் மாலையிலும் முறையாக நடக்கவும் ஏற்பாடு இருந்தது. இவற்றோடு ஓவியம் வரைதலிலும் சிறிதுநேரம் செலுத்தப்பட்டது. விளக்கு வைத்தவுடன், ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் வந்து ஆங்கிலம் கற்பித்து வந்தார். உறக்கத்திற்கு இடையே வெறுப்போடு இதையும் ரவீந்திரர் கற்றுவந்தார். எப்போது மணி ஒன்பது அடிக்கும் என்று ஏங்கியிருந்து மணி அடித்தவுடன் தாயிடம் ஓடுவாராம்; ஓடிச்சென்று கதைகள் சொல்லும்படி கெஞ்சுவாராம்; ஆனால் அன்னையின் வாய் கதையைத் தொடங்கியதோ இல்லையோ, ரவீந்திரரின் கண்கள் உறங்கிவிடுமாம். பள்ளிக்கூடப் படிப்புத் தவிர, வீட்டில் வேறே ஏற்பாடாகியிருந்த தனிப்பாடத் திட்டங்களும் சேர்ந்து, ரவீந்திரருக்குக் கல்வியே ஒரு சுமையாக மாறிவிட்டது. ஆசிரியர் வலுவான உடல் உடையவர். ஆதலால் நோய்வாய்ப்பட்டு நிற்கும்படி நேர்ந்ததில்லையாம்; இதனால் தனிப்பாடத்திலிருந்து ஒருநாள் இருநாள் ஓய்வு பெறுவதற்காக ரவீந்திரர் தம் தாயிடம் வயிற்றுநோய் என்று சொல்லிப் பாசாங்கு செய்வாராம்; தமக்குச் சளியோ சுரமோ வரக்கூடாதா என்றும் ஏங்குவாராம்; பள்ளிக்

கூடத்தை வெறுத்தாற் போலவே தனிப்பாடத்தையும் இவ்வாறு வெறுத்துவந்தார்.

## பாட்டு எழுதுதல்

பள்ளிக்கூடத்தில் படித்துவரும் இளமாணவனாக இருந்தபோதே ரவீந்திரருக்குப் பாட்டு எழுதும் முயற்சி இருந்தது. எழுதும் பொருட்டுக் கொடுக்கப் பட்ட நோட்டுப்புத்தகங்களைப் பாட்டெழுதி நிரப்பிவிடு வது அப்போதே அவருக்கு வழக்கமானது. எழுதிய பாட்டுக்களைப் பிறர் கேட்கும்படியாகப் படித்துவந்தார். அருஞ்சொற்கள் இருப்பது அழகு என்று எண்ணி அத்தகைய சொற்களைப் புகுத்தி எழுதிவந்தார். அப் போது அவருக்கு வயது பதினொன்றுதான். பாட்டின் பொருள், இன்பத்தைப் பற்றி அமைவதைவிடத் துன் பத்தைப் பற்றி அமைவதே தகுந்தது என்பது அப்போது அவர் கொள்கை. இந்தப் பாடல்களைப் பற்றித் தந்தையார் தேவேந்திரநாதர் அறிந்தபோது, எதிர்காலத்தில் ஒருகால் தம் மகன் சிறந்த புலவராக விளங்கமுடியுமோ என்று வியப்பும் அடைந்தார்.

பள்ளிக்கூடத் தலைமையாசிரியரும் இதைப் பற்றிக் கேள்வியுற்றார். ஒருநாள் ரவீந்திரரை அழைத்து, "என்னப்பா! நீ பாட்டு எழுதுவாயாமே. ஏதோ இந்தப் பொருளைப் பற்றி ஒரு பாட்டு எழுது" என்று

சொன்னார். மறுநாளே அந்தப் பாட்டை எழுதி முடித்து ரவீந்திரர் வகுப்பில் எல்லோரும் அறியப் படித்துக்காட்டினார். ஆனால் ரவீந்திரர் அதை எழுதி யிருக்க முடியும் என்று உடனிருந்த பிள்ளைகள் நம்ப வில்லை. எங்காவது புத்தகத்தைப் பார்த்து எழுதிக் கொண்டுவந்த பாட்டாக இருக்கும் என்று சொன்னார் கள். ஆயினும் அவருடைய கவித்திறனை ஆசிரியர் உணர்ந்து போற்றலானார்.

## நாடக எண்ணம்

அவருடைய வளர்ந்த அண்ணன்மார் பொழுது போக்காக மேற்கொண்ட செயல்களிலும் அவருக்கு அக்கரை இருந்தது. அவர்கள் வீட்டில் ஏதாவது நாடகம் நடிக்க ஏற்பாடு செய்வார்கள் ; சிறுவர்களை அதில் சேர்ப்பதில்லை ; பார்க்கவும் விடுவதில்லை. ரவீந்திரர் தொலைவில் நின்றுகொண்டு எப்படியோ பார்த்துவந்தார். பிற்காலத்தில் பெரிய நாடக ஆசிரிய ராகவும் சிறந்த நடிகராகவும் விளங்கப் போகின்ற ரவீந்திரரை அப்போது அந்த அண்ணன்மார் நாடக மேடையை நெருங்குவதற்கும் விடவில்லை. ஆனால் உலகப் பெருமக்களாகிய காந்தியடிகள், திலகர், மாளவியா, ஆண்ட்ரூஸ் முதலானவர் கண்டு போற்றும்படி யான நாடகமேடை அவருக்காகக் காத்திருந்தது.

## வெளியுலகம்

ரவீந்திரர் இளமையில் வீட்டினுள்ளும் பள்ளிக் கூடத்திலுமே அடைபட்டுக் காலம் கழித்தமையால், ரயில்பயணமே தெரியாதவராய் வளர்ந்துவந்தார். ஒருமுறை அவருடைய தந்தையார் அவரைப் போல்பூருக்கும் அங்கிருந்து இமயமலைச் சாரலுக்கும் வருமாறு அழைத்தார். போல்பூருக்குப் பயணமான போதுதான் முதல்முதல் ரயில் பயண அனுபவம் பெற்றார். அவருடைய அண்ணன் சத்யா என்பவர் ரயில் பயணத்தைப் பற்றி இல்லாதவற்றை எல்லாம் சொல்லிப் பயப்படும்படியாகச் செய்திருந்தார். ஆனால் போல்பூர் பயணத்தில் ரவீந்திரர் உண்மை உணர்ந்து கொண்டார். ரயில்பயணம் விரும்பத்தக்கதாகவும் இன்பமாகவும் இருந்ததை உணர்ந்து மகிழ்ந்தார்.

போல்பூரிலிருந்து இரண்டுமைல் தொலைவில் தேவேந்திரர் ஓர் ஆசிரமம் கட்டி அங்கே அடிக்கடி சென்று அமைதியாகத் தங்கியிருந்தார். அந்த ஆசிர மத்திற்கு அவர் இட்ட பெயரே சாந்திநிகேதனம் என்பது. 1873-ல் ரவீந்திரர் அங்கே சென்றபோது தான் முதல் முதலாகக் கூட்டிலிருந்து விடுதலை பெற்ற பறவைபோல் உணர்ந்தார். சாந்திநிகேதனத்தைச் சுற்றிப் பார்த்தார்; அதன் இனிமையான சூழலையும் அமைதியையும் எண்ணி வியந்தார். அங்கே தந்தை

யார் வைகறை தோறும் அமைதியாக இருந்து செய்யும் தியான வழிபாட்டை வியந்து கவனித்தார். பிற்காலத்தில் அவர் வழிபட்டுவந்த அந்த இடத்தைத் தந்தையாரின் நினைவுக்கு உரிய சிறந்த இடமாகப் போற்றி அமைத்தார். அப்போது அங்கு இருந்த இரண்டு மரங்கள் இன்னும் உள்ளன. அவைகளுக்கு இடையே தேவேந்திர நாதரின் நினைவும் விளங்கி வருகின்றது.

தேவேந்திரநாதர் தம் மகனை அங்கிருந்து சீக்கியர்களின் சிறந்த கோயில் உள்ள அமிருத சரஸுக்கு அழைத்துச் சென்று வழிபாடு நிகழ்த்தினர். சமயங்களின் பெருமையையும் ஒற்றுமையையும் முதல் முதலாக ரவீந்திரர் உணர்ந்தது அங்கேதான்.

## இமயமலை

பிறகு இருவரும் இமயமலையின் அடிவாரத்தில் உள்ள டல்ஹவுசி என்னும் இடத்திற்குச் சென்று நான்கு மாதம் தங்கியிருந்தார்கள். அங்கே ரவீந்திரர் தம் விருப்பம்போல் திரிந்து சுற்றிப் பார்த்து இயற்கைக் காட்சிகளைக் கண்டு கண்டு மகிழ்ந்தார். நாள்தோறும் காலையில் தந்தையார் உலாவச் சென்ற போதெல்லாம் அவரும் உடன் சென்றார். ஆனால் நெடுந்தொலைவு நடக்கும் வலிமை இல்லாத காரணத்தால் பாதிவழியில் நின்றுவிட்டு, தந்தையார் திரும்பும்போது உடன்

திரும்பிவந்தார். தம் மகனைப் பல வழியிலும் பழக்க வேண்டும் என்று எண்ணிய தேவேந்திரநாதர் வெந்நீர் தராமல் நாள்தோறும் தண்ணீரிலேயே குளிக்கச் செய்தார். அங்குத் தண்ணீர் பனிக்கட்டிபோல் சில்லென்று இருந்தும் ரவீந்திரர் அதில் குளித்துப் பழகினார். இதன்பயனாக, இங்கிலாந்திற்குச் சென்றிருந்த போதும் குளிர்காலத்திலும் நாள்தோறும் தண்ணீரில் குளிக்க அவரால் முடிந்தது.

## தந்தை கற்பித்தவை

இமய மலையில் இருந்தபோதுதான் ரவீந்திரரின் உண்மையான கல்வி தொடங்கியது என்று கூறலாம். தந்தையார் அங்கே அவருக்கு ஆங்கிலமும் வடமொழியும் கற்பித்தார்; ரவீந்திரரே தனியாகப் படித்துவரும் வகையிலும் ஊக்கமளித்தார். காளிதாசருடைய காவியச் சுவையை ரவீந்திரர் முதல் முதலாகக் காணத் தொடங்கியதும் அப்போதுதான். காளிதாசரின் மேக தூது என்னும் இலக்கியத்தைத் திரும்பத் திரும்பக் கற்றார்.

இரவில் தேவேந்திரநாதர் மகனைத் தம் அருகே உட்காரச் செய்து வானமண்டலத்தைக் காட்டி விண்மீன்களின் நிலையையும் கோள்களின் இயக்கத்தையும் கற்பித்துவந்தார். இவ்வாறு வான நூல் கல்வியும் கற்பித்தார். வெளியே உலாவும் போதும் மற்ற

வேளைகளிலும் மரம் செடி கொடிகளைப் பற்றிச் சொல்லித் தாவரநூலும் கற்பித்தார். கண்மூடிக் கற்கும் வழக்கத்தை விட்டு, எதையும் எண்ணி ஆராய்ந்து உணரும் அறிவு வளரவேண்டும் என்பதே தந்தை யாரின் ஆவல். அதனால் தம் மகன் தவருக வாதாடும் போதும் கருத்து வேறுபடும்போதும் பொறுமை மேற் கொண்டு, உரிமையான அறிவுவளர்ச்சிக்கு இடங் கொடுத்துவந்தார். பிழைபட்ட இடத்தைத் தக்க நேரத்தில் சுட்டிக் காட்டினர். அதனால் ரவீந்திரரின் அறிவில் அஞ்சாமையும் நேர்மையும் குடிகொண்டன; தாமாகவே எண்ணிப் பார்க்கும் ஆற்றலை அவர் எளிதில் பெற்றார்.

## பள்ளிக்கூட விடுதலை

கல்கத்தாவிற்குத் திரும்பியதும் ரவீந்திரர்மீண்டும் பள்ளிக்கூடம் சென்றார்; செயிண்ட் சேவியர் கல்லூரி யில் சேர்ந்தார்; அங்கிருந்த சூழ்நிலை அவருடைய மனத்திற்கு இயைந்ததாக இருந்தது. அங்கிருந்த ஆசிரியர்களும் அவருடைய மனநிலையை அறிந்து நடத்தினர்கள். ஆசிரியர் ஒருவர் அவருடைய திறமையை உணர்ந்து, ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் எழுதிய மாக்பெத் என்னும் நாடகத்தை வங்காளியில் மொழிபெயர்க்குமாறு கூறினர். ஆயினும் ரவீந்திர நாதரின் நெஞ்சம் இமயமலையில் தான் பெற்ற உரிமை

யின்பத்தை நினைந்தது; பள்ளிக்கூட வாழ்வைச் சிறை வாழ்வாகவே எண்ணியது. நாளடைவில் அவருடைய மனநிலையை அண்ணன்மாரும் அறிந்து, தனிப்பட்ட முறையிலே தம் தம்பி படித்து முன்னேறக் கூடும் என்று உணர்ந்தார்கள். அவ்வாறு கொண்ட நம்பிக் கையால் பள்ளிக்கூடம் செல்லாமல் வீட்டிலிருந்து அறிவை வளர்க்குமாறு விட்டுவிட்டார்கள். இதனோடு அவருடைய பள்ளிவாழ்வு ஒருவாறு முடிவு பெற்றது.

# 2. வாழ்க்கை அமைப்பு

## கலைப் பயிற்சி

தாகூர் குடும்பத்தையே ஒரு கலைக்கழகம் என்று குறிப்பிடலாம். வீட்டில் அண்ணன்மார் எப்போதும் அறிஞர்களோடும் கலைஞர்களோடும் பேசி அளவளாவு வது வழக்கமாக இருந்தது. இத்தகையவர்களோடு கலந்து பழகுவதே ரவீந்திரருக்கு ஒருவகைக் கல்வி யாகப் பயன்பட்டது.

மூத்த அண்ணன் பலகலையில் தேர்ந்தவர். அவரு டைய தத்துவ ஞானப் பயிற்சியும் கணக்கறிவும் ரவீந்திரரைக் கவர்ந்தன. பாடல் இயற்றுவதிலும் அவர் தேர்ந்தவர். அவருடைய உதவியால் ரவீந்திரர் நீந்தக் கற்றுக்கொண்டார்.

ஐந்தாம் அண்ணனாகிய ஜோதிரீந்திரநாதர் பெரிய சீர்திருத்தக்காரர். சமூகப் பழக்கங்கள் பலவும் அவ ருக்கு மூட வழக்கங்களாகத் தோன்றின. அவரு டைய மனைவி 'பர்தா' என்னும் முகமூடியைக் களைந்து நடந்தார். அக்காலத்தில் அவ்வாறு செய்வது துணிவு மிக்க புரட்சிச் செயலாகக் கருதப்பட்டது. ரவீந்திர ருக்கு இத்தகைய சீர்திருத்தம் மிகப் பிடித்திருந்தது.

ஆயினும் அவருடைய உள்ளத்தை இந்த அண்ணன் கவர்ந்தது இசைக் கலையாலும் நாடகக் கலையாலுமே ஆகும். அவர் இசைக்கருவிகளை எடுத்துப் பாடும்போதெல்லாம், ரவீந்திரர் அருகே இருந்து பாடல்கள் புனைந்து பாடுவார். பிற்காலத்தில் பெரிய கவிஞராக விளங்கப் போகின்றவர்க்கு இந்தப் பயிற்சி பெரிய காரணமாக இருந்தது. மாலைதோறும், அந்த அண்ணி எதிரே அமர்ந்து போற்ற, அண்ணன் வீணை இசைக்க, ரவீந்திரர் பாடிப் பயில்வது வழக்கமாகிவிட்டது.

## கலையுலகம் கண்டது

அக்காலத்தில் வங்காள இலக்கியத்தைப் பல கதைகள் எழுதி வளர்த்த பெருமை பங்கிம் சந்திர சட்டர்ஜி என்பவருக்கு உண்டு. 'பங்கதர்ஸன்' என்னும் பெயர் கொண்ட மாத வெளியீட்டில் அவர் தம்முடைய கதைகளை வெளியிட்டுவந்தார். பங்கதர்ஸனை மக்கள் மாதந்தோறும் ஆவலுடன் எதிர்பார்த்து வாங்கிப் படித்துவந்தார்கள். தாகூர் குடும்பத்தாரும் அவ்வாறே படித்துவந்தார்கள். பலரும் கேட்கும்படியாக உரக்கப் படிக்கும் திறமை ரவீந்திரருக்கு இருந்தபடியால், அவரே அதைப் பலருக்கும் படித்துக் காட்டி வந்தார். அதனால், கதையுலகம் அவருக்கு நன்றாகப் பழக்கமாயிற்று.

அண்ணன் ஜோதிரீந்திரநாதர் அதேபோல் ‘ பாரதி ’ என்ற பெயரோடு ஒரு திங்களிதழை வெளியிடத் தொடங்கினர். மூத்த அண்ணன் அதற்கு ஆசிரியராக இருக்க இசைந்தார். ரவீந்திரர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, பல பாடல்களையும் கதைகளையும் எழுதிவந்தார். ‘ பாரதி ’யின் நிர்வாகக் குழுவில் அவரும் ஒருவரானர். அப்போது அவருக்கு வயது பதினறே.

அந்த இதழில் ஜோதிரீந்திரர் அடிக்கடி நாடகங்களையும் எழுதிவந்தார். அந்த நாடகங்கள் வீட்டில் நடிக்கப்பட்டன. அவற்றில் ரவீந்திரரும் சேர்ந்து நடித்தார். வேடிக்கைப் பகுதி, உணர்ச்சி மிக்க பகுதி இரண்டிலும் திறம்பட நடித்தார். இந்தக் கலைத் திறமையை அவர் வாழ்நாள் முழுதும் பயன்படுத்தினர்.

## முதல் துயர்

ரவீந்திரரின் பதினன்காம் வயதில் அவருடைய தாய் இறந்தார். தாயின் மரணத்தின்போது அவர் கவலையும் அச்சமும் கொள்ளவில்லை ; ஆனல் தாயின் உடல் அடக்கம் செய்யப்படுவதற்காக வீட்டுவாயிலைக் கடந்து சென்றபோது அவர் துயருழந்தார். தாய்க்குப் பிறகு அவருடைய தமக்கையும் அண்ணியும் ஆறுதல் கூறி அன்புகாட்டி வளர்த்துவந்தார்கள். ஜோதிரீந்திரரின்

மனைவியாகிய இந்த அண்ணியின் ஆதரவை ரவீந்திரர் இறுதிவரையில் மறவாமல் போற்றினூர். தம் தாயின் மரணத்தைத் அவர் கண்டதுபோல், அவருடைய மக்கள் காணும் நிலைமை பிற்காலத்தில் நேர்ந்தது. தம் மனைவி மரணப் படுக்கையில் கிடந்தபோது, இரண்டாம் மகன் சமீந்திரநாதனைப் பக்கத்தில் வைத்திருக்கவில்லை. மரணத்தின் துன்பத்தைத் தம் குழந்தை காணக் கூடாது என்று விரும்பியே அவ்வாறு செய்தார். ஆனல் அவருடைய விருப்பத்திற்கு மாருக, குடும்பத்தில் துயரங்கள் அடுக்கிவந்துகொண்டே இருந்தன.

## முதல் பொறுப்பு

ரவீந்திரரின் அண்ணன் சத்யேந்திர நாதர் என்பவர் ஐ. சி. எஸ். தேர்ந்தவர். 1878-ல் பதினேழாம் வயதில் ரவீந்திரர் அவருடன் இங்கிலாந்திற்குச் சென்ருர். அங்கே ஓர் ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்தார். ஆங்கில மாணவர்கள் அவருடன் அன்பாகப் பழகினூர்கள். பிறகு லண்டன் பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியத்தைக் கற்பிக்கும் வகுப்பில் சேர்ந்து கற்ருர். இங்கிலாந்தில் ஒன்றரை ஆண்டு இருந்தும், ஒரு துறையிலும் தேறவுமில்லை; பட்டம் பெறவுமில்லை. ஆனல் ஆங்கிலேயர் பலரோடு நெருங்கிப் பழகி வாழ்நாள் வரையில் நீடித்த நட்புக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்ருர். இந்தியாவிற்குத் திரும்பி வந்தபிறகு, அவர் சட்டப்

படிப்பில் தேற வேண்டும் என்று குடும்பத்தார் விரும்பினர்கள். அதற்காக மறு ஆண்டிலேயே லண்டனுக்குப் பயணமானர். கல்கத்தாவிலிருந்து கப்பலில் புறப்பட்டார். ஆனல் அவருடன் புறப்பட்ட அண்ணன் மகன் நோய்வாய்ப்பட்ட காரணத்தால், சென்னைத் துறைமுகத்தில் இறங்கிக் கல்கத்தாவிற்கே திரும்ப நேர்ந்தது. சட்டப் படிப்பைப் பற்றிய எண்ணம் இதனோடு கைவிடப்பட்டது. அப்போது ரவீந்திரருக்கு வயது இருபது ஆயிற்று; கிழக்கு வங்காளத்தில் உள்ள நிலபுலங்களைக் கவனிக்கும் பொறுப்பை அவரிடம் தந்தையார் ஒப்படைத்தார்.

## முதல் நூல்

சட்டப் படிப்பைப் பற்றிய முயற்சி நின்ற பிறகு, ரவீந்திரர் கலைத்துறையில் மிகவும் ஈடுபட்டார். இசைக் கலையில் அவர் அரிய தொண்டு செய்யலானர். புதிய பல இசை நயங்களைக் கண்டு வங்காளத்திற்கு அளித்தார். கல்கத்தாவிற்குச் சிறிது தொலைவில் கங்கைக் கரையில் அமைந்திருந்த சந்திரநாகூர் என்னும் ஊரில் ஓர் அண்ணன் குடும்பம் இருந்தபோது, ரவீந்திரரும் அங்கே சென்று அவர்களுடன் தங்கியிருந்து, கங்கையின் பெருமிதத்தையும் வனப்பையும் கண்ணாரப் பருகினர். அப்போது அவர் பாடிய பாடல்கள் பல. அவற்றை எல்லாம் தொகுத்து "மாலைப் பாடல்கள்" என்னும்,

தலைப்புடன் நூலாக வெளியிட்டார். வங்காள ஷெல்லி என்று அறிந்தோர் புகழும் நிலைமை உற்றார்.

ஒரு முறை திருமணம் நடைபெற்ற ஒரு வீட்டிற்கு வங்காள நாவலாசிரியர் பங்கிம் சந்திர சட்டர்ஜி வந்தார். அந்த வீட்டார் அவரை வரவேற்பதற்காக மாலை எடுத்துக்கொண்டு வந்து எதிர்ப்பட்டார். அந்த நேரத்தில் ரவீந்திரரும் அங்கே வந்து வீட்டிற்குள் நுழைய இருந்தார். தம் கழுத்தில் விழ இருந்த மாலையைச் சட்டர்ஜி கையில் வாங்கிக்கொண்டு, ரவீந்திரரின் கழுத்தில் அணிந்து, “இவரே இதற்கு மிகத் தகுதியானவர். இவருடைய ‘மாலைப் பாடல்கள்’ என்ற நூலைப் படித்ததில்லையா ?” என்று கேட்டு, அவரையும் அவரது கலைத் தொண்டையும் பலரும் அறியப் போற்றினார்.

## அழகுக் காட்சி

1882 - ல் ரவீந்திரநாதரின் வாழ்க்கையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அது புறத்தே நிகழ்ந்த மாறுதல் அன்று ; அகத்தே நிகழ்ந்த புதுமை. ஒருநாள் காலையில் கல்கத்தாவில் பொருட்காட்சிநிலையத்தின் அருகே உள்ள வீட்டின் தாழ்வாரத்தில் நின்றுகொண்டு கதிரவன்தோற்றத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். மரங்களுக்கிடையே கதிரவனுடைய ஒளிக் கதிர்கள் பரவிவருவதைப் பார்த்திருந்த அவருடைய உள்ளத்தே பெரிய மாறுதல் நிகழ்ந்தது. இதுவரை

யில் ஊனக் கண்கள் மட்டும் கொண்டு உலகைப் பார்த்து வந்ததாகவும், இப்போது பார்த்த பார்வையில் அவருடைய உள்ளமும் உயிரும் கலந்து நோக்குவதாகவும் உணர்ந்தார். இத்தகைய புத்துணர்ச்சியின் பயனாக, உலகத்தில் காணும் எதுவும் பயனற்றதாக இல்லாமல் காண்பன எல்லாம் குன்றாத எழிலுடன் விளங்குவதாக உணர்ந்தார். தெருவில் சிறுவர் இருவர் கைகோத்துச் சிரித்து மகிழ்ந்து செல்வதைக் கண்டார்; அந்தக் காட்சியில் புதிய இன்பம் குலவுவதை உணர்ந்தார். ஒரு பசு தன் கன்றுடன் செல்வதையும், ஒரு தாய் தன் குழந்தையை ஏந்தி நடப்பதையும் கண்டார்; அழியாப் பேரன்பின் பகுதிகளாக அந்தக் காட்சிகளை உணர்ந்தார். இதற்குமுன் கண்டு பழகுவதற்கு வெறுப்பாக இருந்த ஒருவன் தம்மை அணுகிவருவதைக் கண்டார்; ஆனால் பழைய வெறுப்பே தோன்றாமல், அன்பும் மகிழ்வும் தம் உள்ளத்தில் பொங்குவதை உணர்ந்தார். அன்று அந்தப் புத்துணர்ச்சியைப் பாட்டுவடிவாக வடித்தார்; அந்தப் பாட்டுக்கு “ ஊற்றின் எழுச்சி ” என்ற தலைப்பையும் சூட்டினார். தம் உள்ளத்தின் உள்ளே அடங்கிக் கிடந்த ஊற்று, அன்று காலைக் கதிரவன்தோற்றத்தின் எழிலால் தூண்டப்பட்டு எழுந்ததாக உணர்ந்து பாடினார். அன்றுமுதல் அவர்கண்ணிற்குப் பயனற்ற பொருளாக ஒன்றும் தோன்றவில்லை; இயற்கையில் எந்தப் பொருளும் “ கைபுனைந் தியற்றாக் கவின்பெறு

வனப்" பின் பகுதியாகவே தோன்றி அவருடைய உள்ளத்திற்குக் கலைவிருந்து நல்குவதாயிற்று.

## அன்புநெறி

சத்யேந்திரநாதரின் குடும்பம் இந்தியாவின் மேற்குக் கரையில் கார்வாரில் இருந்தபோது ரவீந்திரர் அவர்களோடு தங்கியிருக்கச் சென்றார். அங்கே மேற்குக் கடலின் பரப்பும் பெருமையும் அவருடைய உள்ளத்தைக் கவர்ந்தன. ஆடல்பாடலிலும் நிலவொளியில் நடத்தலிலும் அவர் காலம் கழித்தார். அங்கே இருந்தபோது எழுதியவற்றில் "சந்நியாசி" என்ற பெயரோடு எழுதிய நாடகம் சிறந்து விளங்குகின்றது. அந்த நாடகத்தில்உலகப்பற்றை எல்லாம் விட்ட துறவிஒருவர் நெடுங்காலம் தனித்திருந்து தம் மனத்தை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு, இனி உலகத்தோடு பழகுவதால் தீமை இராது என்று எண்ணி ஊர்க்குள் புகுகின்றார். அவர் வரும் வழியில் வசந்தி என்னும் பெண் குழந்தை ஒன்று திக்கற்றுத் தனியே வந்து அவர் பக்கத்தே உட்காருகின்றது. துறவி தன்னருகே இருக்கவும் தன்னைத் தொடவும் அக் குழந்தைக்கு இடங்கொடுக்கின்றார். உறங்கி விழித்த வசந்தி முன்னினும் மிகுதியான அன்பு செலுத்த, துறவியின் கல்நெஞ்சம் அந்த அன்பால் நெகிழ்கின்றது. இவ்வாறு தமக்குள் ஏற்படும் நெகிழ்ச்சியைக் கண்டு, நெஞ்சில் பாசம் புகுதல்கூடாது

என்று, அன்புகாட்டும் வசந்தியைப் புறக்கணித்து விட்டு ஓடுகின்றார். அடுத்தாற்போல் நிகழும் காட்சியில் துறவியின் மனம் மாறிவிடுகின்றது. மற்றொரு சிறிய பெண் வறுமையால் வாடிய கோலத்தோடு தன் தந்தையைக் கூவிக்கொண்டு ஓடுவதைக் காணும்போது, துறவியின் நெஞ்சம் வசந்தியை நினைந்து உருகுகின்றது. மீண்டும் வசந்தியைக் காணவேண்டும் என்றும், கண்டு ஆறுதல் கூறவேண்டும் என்றும் நெஞ்சம் உருகுகின்றது. அங்கங்கே தேடிச் செல்கின்றார். துறவுக்கு உரிய கமண்டலத்தையும் திரிதண்டத்தையும் உடைத்து எறிந்துவிட்டு, வருவார் போவார் எல்லோரிடத்திலும் "வசந்தி எங்கே? வசந்தி எங்கே?" என்று கேட்டு அலைகின்றார். இறுதியில் வசந்தி இறந்துவிட்ட செய்தியைக் கேட்டுத் துயருறுகின்றார். இவ்வாறு எழுதிய நாடகத்தால், உலகவாழ்க்கை உய்வுக்குத் துணையே அன்றித் தடை ஆகாது என்றும், அன்புநெறியே வாழ்வுக்கு உரியது என்றும் தாம் கொண்ட கொள்கையை விளக்கியுள்ளார்.

அதே ஆண்டில் ரவீந்திரருக்குத் திருமணம் நடைபெற்றது. மிருணாளினிதேவி என்னும் அருங்குணச் செல்வி துணைவியாக வாய்த்தார். கவிஞரின் இல்லறம் தொடங்கியது.

## ஒற்றுமை ஆர்வம்

கவிஞரின் தந்தையார் பிரம்மசமாஜம் என்னும் அமைப்பை எற்படுத்தி வளர்த்த பெரியார்களில் ஒருவர். சமயச் சீர்திருத்த நோக்கத்தோடு அது எற்படுத்தப்பட்டது. கடவுள் ஒருவரே, விக்கிரக வழிபாடு கூடாது முதலிய பல கொள்கைகளை அந்தச் சமாஜம் வலியுறுத்தியது. தந்தையாருக்குப் பிறகு அது பல பிளவுகளுக்கு உள்ளானது. ஆதிபிரம்மசமாஜம் என்ற பிரிவுக்குக் கவிஞர் செயலாளரானார். பல கூட்டங்களில் பேசினார்; தொண்டு ஆற்றினார். பிற்காலத்தில் அவர் மெல்ல மெல்ல அதிலிருந்து விலகினார். சமயத்தின் பெயரால் பிரிவுகளையும் வேறுபாடுகளையும் பெருக்கிக்கொண்டு போவதை அவர் வெறுக்கலானார். "என் சமயம் மனிதம் என்பதே" என்னும் அளவிற்கு அவர் சமயவேறுபாட்டைக் கடந்து அப்பால் நிற்கலானார். தேசபக்தியிலும் அவர் இத்தகைய மனப்பான்மை கொண்டு வாழ்ந்தார். ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் பகையை வளர்க்கும் தேசபக்தியை அவர் அடியோடு வெறுத்தார். ஆனால், நாட்டின் நன்மையைத் தேடுவதில் அவர் எந்தத் தேசபக்தருக்கும் பின்வாங்கவில்லை. நாட்டிற்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டிப்பதில் அவர் வாழ்நாளில் எப்போதும் சோர்ந்திருந்ததே இல்லை. ஆனால் அதற்காக மற்றொரு நாட்டைப் பழிக்கவோ, அந்த நாட்டு

மக்களைப் பகைக்கவோ அவர் முனைந்ததில்லை. அவருடைய நெஞ்சம் எப்போதும் அன்புகொண்டு பிணைக்க முனைந்ததே அல்லாமல், பகைகொண்டு பிரிக்க முயலவில்லை.

## நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும்

அவருடைய நெஞ்சத்தில் உலகம் குடிகொண்டிருந்தது; உலகமக்கள் எல்லோரும் அவருடைய அன்புக்கு உரியவர்களாக இருந்தார்கள்; எல்லோரும் அமைதியான இன்ப வாழ்வு வாழவேண்டுமென்பதே அவருடைய தொண்டின் அடிப்படையாக - சமய உணர்வாக - விளங்கியது.

அவருடைய பாடல்களில் வங்காள நாடு விளங்கியது; அந்நாட்டுக் கருப் பொருள்கள் திரும்பத் திரும்பப் பாடப்பட்டன. வங்காள கிராமங்களின் முன்னேற்றத்திற்காகவும் வங்காளிமொழியின் முன்னேற்றத்திற்காகவும் அவர் சலியாது உழைத்தார்.

வங்காள மக்களுக்கு இருந்த ஆங்கிலமோகத்தைப் போக்கியதில் கவிஞர் பெருந்தொண்டு ஆற்றினார் என்று கூறவேண்டும். பள்ளிக்கூடங்களில் ஆங்கிலத்தின் வாயிலாகப் பாடங்களைக் கற்பித்து வருதலை மிகமிக வன்மையாகக் கண்டித்தவர் அவர். தாய்மொழியின் வாயிலாகவே அறிவை வளர்க்கவேண்டும் என்பதை

அவர் மிக உறுதியாக எடுத்துரைத்துவந்தார். கூட்டங்களில் ஆங்கிலத்தில் பேசும் பழக்கத்தை விடவேண்டும் என்ருர். தாமே முதலில் முன்வந்து வங்காளியில் பேசி, தாய்மொழியில் பேசப் பெருமைகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினர். பல்கலைக்கழகத்துப் பட்டமளிப்புச் சொற்பொழிவுகளை ஆங்கிலத்தில் நிகழ்த்துவதே அக்காலத்தில் உயர்ந்த நாகரிகமாக இருந்துவந்தது. அது அநாகரிகம் என்பதைச் சொல்லால் சுட்டாமல், செயலால் அறிவித்தவர் கவிஞரே. பல்கலைக்கழகம் அவரை அழைத்துப் பட்டமளிப்புப் பேச்சு நிகழ்த்தக் கேட்டபோது, வங்காளியிலேயே பேசினர்.

## கிராம முன்னேற்றம்

வடவங்காளத்தில் பத்மா ஆற்றின் கரையில் இருந்த நிலபுலங்களைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு கவிஞருக்குக் கிராமங்களை நன்ருக அறியும் வாய்ப்புக் கிடைத்தது. கிராமங்கள் சீரும் சிறப்பும் இழந்து நிற்கும் காரணங்களைக் கண்டறியத் தொடங்கினர். கிராமமக்கள் செல்வர்களையும் அரசியலாரையும் நம்பித் தன்னம்பிக்கையும் முயற்சியும் அற்றவர்களாக மாறின கதையை நேரில் அறிந்தார். அவர்களை வாழ்விக்கும் வழிகள் என்ன என்று ஆராய்ந்தார். பல கிராமங்களுக்கும் நேரில் சென்று உண்மை

நிலையைத் தெளிந்தார். இந்த அனுபவத்தை எல்லாம் எழுதினார்; சிறு கதைகள் ஆக்கினார்; இலக்கிய உலகில் வாழவைத்தார்; கற்றவர்களின் மனத்தைக் கிராமச் சீர்திருத்தத்தில் திருப்பினார்.

## கல்விச் சீர்திருத்தம்

கவிஞரின் நாற்பதாம் வயதில் அதாவது 1901-ல் மற்றொரு மாறுதல் நிகழ்ந்தது. அவருடைய உள்ளத்தில் இருந்த அமைதி கலைந்தது; ஏதோ ஒரு புதிய முயற்சியை உள்ளம் நாடி அலைந்தது. அந்த அலைவே சாந்திநிகேதனம் என்னும் அமைதிக்கோயிலில் கலைத் தொண்டு புரியுமாறு கவிஞரைத் தூண்டியது.

கவிஞரின் உள்ளத்தின் ஆழத்தில் குழந்தைகளின் மேல் தனியான அன்பு நிலவியது. குழந்தைகளைப் பற்றிப் பாடிய கவிஞர்களை ஆராய்ந்தால்,உலகத்திலேயே ரவீந்திரநாத தாகூருக்கே சிறப்பிடம் உண்டு எனலாம். அவருடைய பாடல்களில் மட்டும் அல்லாமல், அவருடைய வாழ்விலும் அந்த அன்பு மிக்கிருந்தது. குழந்தைகள் மகிழ்ச்சியோடு ஆடிப் பாடி வளரவேண்டும் என்பது அவருடைய பேராவல். அவ்வாறு வளர்ந்தால்தான் குழந்தைகள் பெற்றுள்ள உள்ளத்தின் திறனும் உயிரின் உணர்வும் நன்கு பயன்பட்டுச் சிறப்புறும் என்பது அவருடைய நம்பிக்கை. குழந்தை

களின் கல்வியைப்போல் பயனுள்ள துறை வேறொன்று இல்லை என்று அவர் உணர்ந்தார். தக்க கல்விமுறை இல்லாத குறையால், இளமையில் தாம் பட்ட பாடு அவரது நினைவிலிருந்து நீங்கவில்லை. சிறைக்கூடமாக இருக்கும் பள்ளிக்கூட வாழ்வை எப்படியாவது மாற்றத் துணிந்தார்; உணர்வற்ற பாடபுத்தகங்களிலிருந்து கற்கும் கண்மூடி வழக்கத்தையும் மாற்றத் துணிந்தார்; பொருள் விளங்காத பாடத்தை யந்திரம்போல் கற்கும் முறையால் குழந்தைகளுக்கு இயற்கையாக உள்ள ஆற்றல் மங்குவதால் அதைப் போக்க விரைந்தார். விருப்பம்போல் விளையாடி, வேண்டியதைக் கற்கும் படி உரிமை கொடுத்துக் குழந்தைகளை வளர்க்க வேண்டும்; குறித்த நேரத்தில் யந்திரம்போல் பெஞ்சு களில் உட்கார்ந்து கற்காமல் ஆடிப் பாடி விருப்பம் போல் அறிவை வளர்க்குமாறு வாய்ப்புத் தரவேண்டும்; குழந்தைகள் தாமே அறிவுப்பசி எடுத்து அறிவுணவை நாடவேண்டும்; இசையாலும் நாடகத்தாலும் முயற்சியா லும் ஆர்வத்தாலும் கல்வி வளரவேண்டும்; இயற்கை பகையானது அன்று, நட்பானது தான் என்று உணர்ந்து இயற்கையோடு பழகிக் கற்கவேண்டும் - இவ்வாறெல் லாம் கவிஞர்உள்ளத்தில் ஆர்வம் எழுந்தது.

## இல்வாழ்க்கை

ரவீந்திரரின் இல்வாழ்க்கை பதினைந்து ஆண்டு களே நடைபெற்றது. இனிமையும் எளிமையும்

அவருடைய இல்வாழ்க்கையில் விளங்கின. மிருணாளினி தேவியார் உயர்பண்புகளுக்கு உறைவிடமானவர்; தம் கணவருடைய கலையுள்ளத்தை உணர்ந்து உண்மைத் துணைவியாக வாழ்ந்தவர். இத்தகைய துணைவியாரைப் பெற்ற காரணத்தால் வீட்டுக் கடமைகளைச் செய்து கொண்டே ரவீந்திரர் கலைத்தொண்டும் செய்ய முடிந்தது. அவருடைய மணவாழ்க்கைக்கு நன்கலமாக ஆண்மக்கள் இருவரும் பெண்மக்கள் மூவரும் பிறந்து வளர்ந்தார்கள்.

## எளிய வாழ்க்கை

ரவீந்திரர் ஆடம்பரத்தை வெறுத்தவர்; தூய்மை என்பதும் அழகு என்பதுமே அவருடைய உள்ளத்தைக் கவர்ந்தன. ஆனால் அவற்றிற்காக ஆடம்பரத்தை அவர் நாடியதில்லை. தம் மனைவியார் குழந்தைகளுக்கு விலையுயர்ந்த துணிமணிகள் வாங்க முயன்றபோது அவர் தடுத்தார். செல்வக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அந்த அம்மையாரும் கணவருடைய குறிக்கோளை உணர்ந்து அவ்வாறே நடந்தார். தாம் ஒரு நகை மூட்டையாகத் தோன்றாமல், நகைகளை மூட்டை கட்டித் தனியே வைத்துவிட்டு எளிய அழகிய கோலத்தோடு வாழ்ந்தார். அதுவே அந்த அம்மையாரின் இயல்பான பண்பாகிவிட்டது. குடும்பத்தில் ரவீந்திரர் எல்லோரிலும் இளைய பிள்ளையாகையால்,

அவருடைய மனைவியார் வயதில் இளையவராக இருந்தும், முறையில் பெரியவராக இருந்தார்; சித்தி என்றும் மாமி என்றும் பாட்டி என்றும் தம்மை அழைக்கக் கூடிய பலர் விளங்கிய குடும்பத்தில், அவர்களின் எதிரே தாம் அலங்காரமாகத் திரிவதைத் தவறு என்றே எண்ணினார். தம் வயதினராகத் தமக்கு மருமக்கள்மார் பலர் இருந்த குடும்பத்தில் மதிப்புக்கு உரியவராகப் பெருந்தன்மையாக நடந்துகொண்டார்.

ஒருமுறை கணவருடைய பிறந்த நாளின்போது தங்கத்தால் பொத்தான்கள் செய்து அவருக்குத் தர எண்ணியிருந்தார். ஆனால், ரவீந்திரர், "ஆண்கள் நகை போட்டுக்கொள்வதா?" என்று மறுத்து விட்டார். கணவருடைய உறுதியைப் பலநாளும் கண்ட அந்த அம்மையாரும் உடனே தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டார்.

## கருத்து ஒருமை

பெண்களுக்குத் தட்டுமுட்டுச் சாமான்களை நிறையச் சேர்த்துக்கொள்வதிலும், ஓர் இடத்தி லிருந்து வேறிடத்திற்குச் செல்லும்போது நிறைய எடுத்துச்செல்வதிலும் ஆசை இயல்பாக உண்டு. ரவீந்திரருக்கோ அதில் எப்போதும் வெறுப்பே உண்டு. "உடுத்திக்கொள்ள ஆடை இரண்டு இருந் தால் போதுமே, இவை எல்லாம் ஏன்?" என்பதே

அவர் அடிக்கடி கூறிவந்த அறிவுரை. ஆயினும் குடும்ப வாழ்க்கையில் அப்படி முடிவதில்லை. தேவை களையும் பொறுப்புக்களையும் பெண்கள் நன்ருக உணர்ந்தவர்கள். மிருணளினி அம்மையார் தம் கடமையை ஒருபக்கம் எண்ணி, மற்ருெருபக்கம் கணவருடைய கொள்கையின் உறுதியையும் எண்ணி, தக்கவாறு நடந்துவந்தார்.

சாந்திநிகேதனத்திலும் கவிஞர் மற்றவர்களைப் போல் குடிசை அமைத்து வாழ முயன்ருர்; மற்றவர் களைப் போல எளிய உணவே உண்டு வாழ்க்கை நடத்த முனைந்தார். இந்த முயற்சிகளிலும் அம்மையார் உண்மையான வாழ்க்கைத்துணைவியாக விளங்கினுர். ரவீந்திரரும் தம் மனைவியாரின் உண்மையன்பைப் போற்றினுர். சமையலறையில் உடனிருந்து பொழுது போக்கவும் வந்துவிடுவார். எத்தனையோ கடமை களுக்கு இடையே காய்கறிப் பேச்சிலும் தின்பண்ட விளக்கங்களிலும் ஈடுபடுவார். மிருணளினிதேவியார் நோய்வாய்ப்பட்டு இரண்டு மாதம் படுக்கையில் இருந்த போது ரவீந்திரர் செய்த உதவியும், இறுதிவரையில் உடனிருந்து செய்த தொண்டும் எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கிவிட்டன. வேறு யாரையும் விசிறுவதற்கு விடாமல், தாமே இரவுபகலாக நோ யாளிக்கு விசிறிக்கொண் டிருந்தார். உறுதியான கொள்கைகள் பலவற்றின் காரணமாக வாழ்க்கையில்

சிறு சிறு போராட்டங்கள் தோன்றுவது இயல்பானலும், உண்மையான அன்பைச் செலுத்தி வாழ முடியும் என்பதற்கு அவருடைய இல்வாழ்க்கை எடுத்துக்காட்டாக நிற்கின்றது.

குழந்தைகளின் வளர்ப்பிலும் அவர் தம் நெஞ்சத்தைச் செலுத்தினர். வழிகாட்டுவதில் மட்டும் அல்லாமல், குளிக்கச் செய்தல், ஆடை உடுத்தல், படுக்கைபோட்டு உறங்கச் செய்தல் முதலிய கடமைகளையும் வாய்த்தபோதெல்லாம் குழந்தைகளுக்காகச் செய்யத் தயங்கியதில்லை.

இத்தகைய அருமையான இல்வாழ்க்கை ரவீந்திரரின் முப்பத்தொன்பதாம் வயதில் முடிவுபெற்றது. துணைவியாரின் ஆவி பிரிந்ததும், தனியே மேல்மாடிக்கு ஏறிச் சென்று, யாரையும் தம்மிடம் வராதபடி தடுத்து இங்கும் அங்குமாக உலவிக்கொண்டிருந்தார்.

# 3. தொண்டு

## சாந்திநிகேதனம்

தந்தையார் தேவேந்திரநாதர் மிக்க மூப்பு அடைந்து தளர்ந்தபோது தம் காலத்தைப் பெரும் பாலும் வழிபாட்டிலும் தியானத்திலுமாகவே கழித் தார். ரவீந்திரர் அப்போது அடிக்கடி அவரிடம் சென்று அமர்ந்து கடவுளைப் பற்றித் தாம் பாடிய "நைவேத் தியம்" என்ற நூலிலிருந்து பாடல் பலவற்றைப் பாடிப் பெரிய ஆறுதலாக விளங்கினார். தேவேந்திரர்க்கு இது மிக மகிழ்ச்சியாக இருந்தது; தம் மகன் உண்மை யான முறையில் கடவுளைப் பற்றிய உணர்வைப் பெற்று விட்டதை அறிந்து களித்தார். ஒருநாள் தம் மகனைப் பார்த்து, "பழங்காலத்தில் இப்படிப் பாடுகின்ற புலவர்க்கு மன்னர்கள் பரிசளித்து மகிழ்வார்கள். இப் போது அவ்வாறு செய்பவர் இல்லை. ஆகையால் நானே ஏதாவது செய்ய வேண்டும்" என்று கூறி, பெருந்தொகை ஒன்றை எடுத்து மகன்கையில் கொடுத்தார். அது அந்த நூலை அச்சிட்டு வெளியிட உதவியது. அச்சு முடிந்ததும் ரவீந்திரர் நூலை எடுத்துக்கொண்டு தந்தையாரிடம் சென்று மற்றொரு பரிசு கேட்டார்; சாந்திநிகேதனத்தில் ஒரு கலைக்கழகம் நடத்துவதற்கு

இடம் தந்து இசைந்தருளுமாறு கேட்டார். தந்தையார் கேட்டு மகிழ்ந்து அந்த முயற்சியை உளமார வாழ்த்தினார். 1901-ல் குடும்பத்தோடு சென்று சாந்திநிகேதனத்தில் வாழத் தொடங்கினார்.

சாந்திநிகேதனம் இயற்கையமைப்பாலேயே அமைதிக்கு உரிய தனியிடமாகும். நாற்புறமும் கண்ணுக்கு எட்டிய வரையில் வெட்ட வெளியாகவே இருந்தது. சாந்திநிகேதனத்தில் பல அழகான மரங்கள் வளர்ந்து ஓங்கியிருந்தன. தேவேந்திரநாத தாகூர் பல மாதங்கள் அங்கே தங்கிக் காலம் கழித்துவந்தார். ரவீந்திரரின் மூத்த அண்ணனும் பெரும்பாலும் அங்கே தங்கியிருந்தார். அமைதியையும் தியானத்தையும் நாடி அடிக்கடி நண்பர்கள் அங்கு வந்து சென்றார்கள். தொழுகைக்கு உரிய நிலையம் ஒன்று அங்கே அமைக்கப்பட்டிருந்தது. ஒரே கடவுள் என்றும் கடவுள் உருவமற்றவர் என்றும் வழிபடும் முறை வற்புறுத்தப்பட்டு வந்தது. வழிபாட்டில் அமைதி நிலவுவதற்காக, மூன்று விதிகளை ஏற்படுத்தியிருந்தார்கள்:—ஒன்று, விக்கிரக வழிபாடு கூடாது என்பது ; இரண்டாவது, மற்ற எந்தச் சமயத்தைக் குறித்தும் குறைகூறக் கூடாது என்பது; மூன்றாவது, பறவையாயினும் விலங்காயினும் வேறு எதுவாயினும் எந்த உயிர்க்கும் துன்பம் செய்யக்கூடாது என்பது.

## பள்ளிக்கூடத் தொண்டு

கவிஞர் சாந்திநிகேதனத்தில் பள்ளிக்கூடம் தொடங்கியபொழுது, மாணவராகச் சேர்ந்த சிறுவர் ஐவரே. அவர்களுள் கவிஞரின் மகனும் ஒருவன். சில ஆண்டுகள் கழிந்த பிறகு நூற்றுக்கு மேற்பட்ட தொகையினர் சேர்ந்து கற்றார்கள். இப்போது அங்கே சிறுமியரும் பலர் சேர்ந்து கற்கிறார்கள். எளிமையில் செம்மை என்று இந்த நாட்டுச் சான்றோர் பழங்காலத்தில் வாழ்ந்த வாழ்வைக் குறிக்கோளாக வைத்துக் காட்டிக் கல்வி கற்பித்தார். ஏராளமான கட்டிடங்களும் பொருள்களும் இன்ப வாழ்விற்குக் காரணம் அல்ல. இயற்கையோடு இயைந்த எளிய வாழ்வே இன்ப அமைதியைத் தரும் என்று அறிவுறுத்தினார். பள்ளிக்கூடங்கள் நகரங்களின் நெருக்கடிக்கு இடையே அமைவதால் பயனில்லை என்பதும், காடுகளின் இடையில் இயற்கைச் சூழலில் அமைய வேண்டும் என்பதும் அவருடைய கொள்கைகள்.

சாந்திநிகேதனப் பள்ளிக்கூடத்தில் பாட்டும் இசையுமே பெருகியிருந்தன. ஒவ்வொருநாளும் பள்ளிக்கூடம் இசைமுழக்கோடு தொடங்கி இசை முழக்கோடு முடியும். நாள்தோறும் வைகறையில் ஆசிரமத்தைச் சுற்றிச் சிறுவர் சிலர் பாடிக்கொண்டு செல்வர்; இந்தப் பாடல்கள் மற்றச் சிறுவரை எழுப்பிவிடும்

பள்ளியெழுச்சிப் பாடல்களாக விளங்கும். கவிஞரின் பாடல்கள் பல இவ்வாறு பாடப்படும். காலைமாலையில் கடவுள்வழிபாட்டிலும் பாடல்கள் இசைக்கப்படும். பருவம் மாறும்போதெல்லாம் திருவிழாக் கொண்டாட்டம் நடக்கும். உழவர்கள் உழத்தொடங்கும்போதும் சாந்திநிகேதனத்தில் திருவிழா நடக்கும். அப்போதெல்லாம் ஆடல் பாடல் கண்கவர்ச்சி நாடகம் எல்லாம் உண்டு. ஒவ்வொரு விழாவிற்கும் பொருந்தும் வகையில் புதிய புதிய நாடகங்களைக் கவிஞர் எழுதியுதவினார். இவ்வாறு எழுதப்பட்ட நாடகங்கள் பற்பல.

தம் குறிக்கோளுக்கு ஏற்ற முறையில் கல்வி புகட்ட வல்ல ஆசிரியர் பலரைக் கவிஞர் தேடிச் சேர்த்தார். வாழும் உலகத்தைப் பற்றியும் வாழ்க்கை நடத்தும் மக்களைப் பற்றியும் எவ்வளவு கற்பித்தாலும் சலியாமல் கற்கும் பசி சிறுவர்க்கு இயல்பாக இருப்பதை அவர் உணர்ந்தார். பயனற்ற, சுவையற்ற, இறந்த காலச் செய்திகளை அறிவதில் அவர்களுக்கு உள்ள வெறுப்பையும் புறக்கணிப்பையும் அறிந்தார். சுவையான முறையில் கல்வி புகட்டினால், விளையாட்டில் உள்ள அவ்வளவு அக்கரை கொண்டு சிறுவர்கள் தாமாகவே 'இது என்ன?' 'அது என்ன?' என்று விடாமல் கேட்டு அறிவு வளர்ப்பதையும் கண்டார். இவ்வாறு செய்தால் வேலைக்கும் விளையாட்டிற்கும் உள்ள வேறுபாடு மறையும், வீட்டிற்கும் பள்ளிக்கூடத்திற்கும் உள்ள வேறு

பாடும் மறையும் என்று அவர் நம்பினார். அதனால் சாந்திநிகேதனத்தில் சட்டதிட்டங்கள் இல்லாமல் செய்தார்; ஆள்வோர் ஆளப்படுவோர் இல்லாமல் செய்தார்; ஆசிரியர்களும் மாணவர்களும் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்களாகப் பழகிக் கற்க முடிந்தது.

சட்டதிட்டங்களின் ஆட்சியும் அடக்குமுறையும் இல்லாமல் செய்தாரே அல்லாமல், ஒழுங்கு முறையினால் அமையும் கட்டுப்பாட்டைப் புறக்கணிக்கவில்லை. எல்லோர்க்கும் பொதுவான, எல்லோர்க்கும் நன்மையான, யார்க்கும் தீமைசெய்யாத ஒழுங்குமுறை வளரச் செய்தார். தவறினவர்களைத் தண்டிக்கும் பொறுப்பை ஒருவர் கையில் விடாமல், மாணவர்களே மன்றம் அமைத்துக் கூடி எண்ணிச் செய்யுமாறு ஏற்படுத்தினார். எல்லா உயிரிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்பதைப் பொதுவிதியாக்கினார்; மற்றவர்களின் பழக்கவழக்கங்களையும் மொழி முதலியவற்றையும் இகழாமல் மதித்து நடக்கக் கற்பித்தார்.

## இடையூறுகள்

இந்தச் சீரிய தொண்டு தொடக்கத்தில் கவலைக்கும் தொல்லைக்கும இடமானதாக இருந்தபோதிலும், கவிஞர் இதனால் ஆறுதலும் இன்பமும் பெற்றார். பணம் இல்லாக் குறை பெரிதாக இருந்தது. கவிஞரின்

மனைவியார் தம் நகைகளை விற்றுப் பணம் உதவும் நிலைமையும் நேர்ந்தது. 1902-ல் இத்தகைய அருமைத் துணைவியார் நோய்வாய்ப்பட்டு இறந்ததுதான் முதலில் பெரிய இடையூறாயிற்று. 1903-ல் கவிஞரின் அருமை மகள் - ரேணுகா என்னும் செல்வி - திருமணமான நங்கை இருமல் நோய்க்கு இரையானாள். அவளைக் காப்பாற்றக் கவிஞர் மேற்கொண்ட பெருமுயற்சி எல்லாம் வீணாயிற்று. 1904-ல் சதீஸ்சந்திரராய் என்னும் கவிஞர் - சாந்திநிகேதனப் பள்ளிக்கூட ஆசிரியர் - உயிர் நீத்தார். 1905-ல் கவிஞரின் ஒப்பற்ற தந்தையாரும் பிரிந்தார். 1907-ல் கவிஞரின் இளைய மகன் சமீந்திரநாதன் என்னும் செல்வன் தன் பதின்மூன்றாம் வயதிலே உலகை நீத்தான். இவ்வளவு துயரங்களுக்கு இடையே ஓயாமல் தொண்டு செய்து வரும் நிலைமை கவிஞருக்கு நேர்ந்தது.

இந்தத் துன்பங்களை அல்லாமல் இடையூற்றைப் பெருக்குவதற்குக் காரணமாகப் பொல்லாத பொருள் முடையும் பெருகிவிட்டது. இந்திய நாடு வளம் பெறுவதற்குச் சுதேசக் கைத்தொழிலும் சுதேச வாணிகமும் வளரவேண்டும் என்னும் ஆர்வத்தால், தாகூர் சில நன் முயற்சிகளைப் போற்றினார். நண்பர்களும் உறவினர்களும் தொடங்கிய அமைப்புக்களில் பணம் பங்கு வைத்து அக்கரை கொண்டார். ஆனால் அவைகள் எல்லாம்

அரசாங்க ஆதரவு இல்லாத குறையால் வீழ்ச்சியுற்றன. போட்ட முதலும் போக, பெருங்கடன் ஏற்படுத்தி விட்டன; அதனால் தாகூரும் கையிலிருந்த செல்வத்தை இழந்து கடன்பட நேர்ந்தது.

## வங்காள இயக்கம்

நாட்டு மக்களுக்குத் துன்பம் நேர்ந்தபோதெல்லாம் கவிஞர் தாகூர் இரவுபகலாக உழைத்துத்தொண்டு ஆற்றினார். அவருடைய வாழ்நாள் முழுதும் இந்த நல்ல இயல்பு காணப்பட்டது. முதல்முதலாக அவர் நாட்டுத் தொண்டில் ஈடுபட்டது 1899-ல் கல்கத்தாவில் பிளேக் என்னும் தொத்துநோய் பரவியபோதுதான். தாகூர் அப்போது இராமகிருஷ்ண மடத்து நிவேதிதை அம்மையாருடன் ஓய்வில்லாமல் பாடுபட்டுப் பணம் திரட்டித் துன்பம் தீர்க்கும் பணியில் ஈடுபட்டார். வங்காளத்தில் அடிக்கடி நேர்ந்துவந்த வெள்ளத்தின் கொடுமையைத் தணிப்பதற்காகவும் அவர் அவ்வப்போது அளவற்ற தொண்டு புரிந்தார். பஞ்சம் வந்தபோதும் முன்னின்று காப்பாற்றினார். பூகம்பம் காரணமாகப் பீகாரும் குவெட்டாவும் சொல்லொணாத் துன்பத்திற்கு இரையானபோது அவர் மேற்கொண்ட முயற்சி மறக்க முடியாதது.

வங்காளத்தைக் கிழக்கு வங்கம் மேற்கு வங்கம் என்று துண்டுபடுத்த 1905-ல் அரசாங்கத்தார் செய்த

முயற்சியைத் தகர்க்க வங்காளிகள் சீறி எழுந்தார்கள். அவர்களுக்குத் தலைமை தாங்கிப் போராட்டத்தை நடத்திய பெருமை தாகூரைச் சார்ந்தது. அவர் அப்போது பேசிய கூட்டங்களுக்குக் கணக்கில்லை. அவருடைய அப்போதைய முழக்கம் உலகமெல்லாம் கேட்டது. அவர் அந்தப் போராட்டத்தின்போது பெரிய போர்வீரராக விளங்கினார். தம் கவிதைத் திறனையும் அந்தப் போராட்டத்திற்குப் பயன்படுத்திப் பாடல் பல இயற்றி முழங்கினார். அந்தத் தொண்டே வங்காள மக்களைச் சீறி எழுந்து போராடத் தூண்டியது; அரவிந்தர் போன்ற இளைஞர் பலர் நாட்டுத் தொண்டில் முனையவும் செய்தது. கல்கத்தாவில் அவர் மிகப் பெரிய ஊர்வலத்தைத் தலைமை தாங்கி நடத்தினார். கூட்டங்களில் பேசி நிதி திரட்டினார். ஒரு கூட்டத்தில் கேட்டவுடனே ஐம்பதினாயிர ரூபாய் திரட்டக்கூடிய அவ்வளவு செல்வாக்கு அவருக்கு இருந்தது. பகைகொள்ளாத ஒத்துழையாமை வேண்டும் என்று அறிவுறுத்திப் போராட்டத்தை நடத்தினார். அதிகாரிகளைத் தாக்கவோ வருத்தவோ கூடாது என்றார். மாணவர்கள் இயக்கத்தில் கலந்துகொள்ளக் கூடாது என்றும் தெரிவித்தார். ஆனால் இயக்கம் படிப்படியாக அவருடைய கருத்திற்கு மாறாக அன்பு நெறியை விட்டு மாறியது. அதனால் அரசியல் போராட்டத்தை விட்டு விலகிப் பழையபடி சாந்திநிகேதனத்தில் அமைதியாகத் தொண்டுசெய்யச் சென்றார்.

பொதுமக்கள் ஆராய்ந்து பார்க்காமல் பழித்தார்கள்; தேசபக்தி அற்றவர் என்று தூற்றினார்கள். தாகூரோ புகழையும் பழியையும் பொருட்படுத்தாமல் கடமையில் கண்ணாக இருந்தார்; போராட்டத்தில் நெறி தவறி வெறி பிடித்து நடப்பதைவிடச் சிறந்த நாட்டுத் தொண்டைப் பள்ளிக்கூடத்திலும் கிராமங்களிலும் செய்யமுடியும் என்று பொறுமையோடு விளங்கினார். 1908-ம் ஆண்டிலேயே இந்து முஸ்லீம் பிணக்கைத் தடுக்க அவர் எவ்வளவோ பாடுபட்டார். சமய வேறுபாடு மக்களைப் பிரிக்கக் கூடாது என்று அவர் அந்தக் காலத்திலேயே அறிவுறுத்தினார். ஆனால் அதற்கு நேர்மாறாக வங்காளம் சமயத்தின் பெயராலேயே துண்டாடப்பட்டுக் கிடக்கும் நிலைமை நேர்ந்து விட்டது. இதை நினைக்கும்போது அவருடைய நன் முயற்சி பயன்தரவில்லையே என்ற வருத்தம் விளைகின்றது.

## மீண்டும் கலைத்தொண்டு

அரசியல் போராட்டத்தை விட்டு விலகிய பிறகு அவர் அரிய பெரிய கலைத்தொண்டு செய்ய முடிந்தது. உலகப் புகழ் பெற்ற கீதாஞ்சலியை அவர் அப்போது தான் இயற்றினார். பல நாடகங்களும் எழுதினார். பலவற்றைத் தம் கலைக்கழகத்தில் நடிக்கச் செய்தார்: அவற்றின் ஒத்திகைகளைத் தாமே நேரில் இருந்து

நடத்தினர். தாமும் முக்கியமான நாடக உறுப்பினராக இருந்து நடித்து எல்லோரையும் மகிழ்வித்தார். சாந்திநிகேதன மாணவர்களுக்கு அவருடைய ஒத்திகைகளும் நடிப்பும் பெரிய கல்வியாக விளங்கின.

1911-ல் அவருடைய ஐம்பதாம் ஆண்டுவிழா சாந்திநிகேதனத்தில் மட்டும் அல்லாமல் வங்காளத்தில் பல இடங்களில் கொண்டாடப்பட்டது. அவரைப் பழித்த மக்கள் போற்றத் தொடங்கினர்கள். நாட்டின் வெறுப் பெல்லாம் அன்பாக மாறத் தொடங்கியது. 1912-ல் கல்கத்தா நகர மண்டபத்தில் நடைபெற்ற பெருங்கூட்டத்தில் வங்காள இலக்கியக் கழகத்தார் அவர்க்கு ஒரு பாராட்டுரை வழங்கினர்கள். அதை அடுத்தாற்போல் நடந்த பிரம்ம சமாஜத்தின் ஆண்டு விழா நடைபெற்றபோது அவர் கலந்துகொண்டு, தாம் இயற்றிய ஒரு சிறந்த பாடலைப் பாடினர். அந்தப் பாடலே இப்போது இந்திய அரசாங்கத்தார் நாட்டு வணக்கமாகக் கொண்டுள்ள “ ஜன கண மன ” என்ற புகழ்பெற்ற பாட்டாகும்.

# 4. பெருவாழ்வு

## ஐரோப்பா பயணம்

அந்த ஆண்டில் ஐரோப்பாவிற்குப் போய்வர ஏற்பாடுகள் செய்துவந்தார். அதற்குள் அவருடைய உடல்நலம் குன்றி நோயுற்றார். உடனே பயணத்தை ஒத்திவைத்துவிட்டு, ஒரு கிராமத்திற்குச் சென்று கடமை எல்லாம் துறந்து ஓய்வு கொண்டார். அந்த நாட்களில் பொழுதுபோக்கிற்காக அவர் கீதாஞ் சலியை மொழிபெயர்த்திட்டார். பொழுது போக்கிற் காகச் செய்த இந்த முயற்சியே அவருடைய வாழ்க் கைக்குப் பெரிய நன்மையைத் தேடித் தந்தது; உலகப் புகழையும் வாங்கித்தந்தது. அவற்றை அச்சிட வேண்டும் என்ற எண்ணமும் இல்லாமல் மூலையில் வைத்துவிட்டார்.

1912-ல் லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார். அப்போது லண்டனிலிருந்த வில்லியம் ரோதென்ஸ்டின் என்பவர் சாந்திநிகேதனத்தை நேரில் கண்டு கவிஞருடன் பழகி நட்புக் கொண்டவர். ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட பாடல்களை அவர் மிக வியந்து பாராட்டினார்; யீட்ஸ் என்ற தம் நண்பருக்கும் காட்டினார்; இன்னும் பல நண்பர்களுக்கும் காட்டினார்.

அவர்கள் எல்லோரும் ஒரு முகமாகத் தாகூரைப் போற்றினார்கள். அப்போது பாடல்களைக் கேட்டுத் தாகூருக்கு நண்பர்களான ஆங்கிலேயர் வெல்ஸ், பெர்னார்ட்ஷா, பெர்ட்ரண்ட் ரஸ்ஸல், ராபர்ட் பிரிட்ஜ் முதலானவர் பலர். அவர்களுள் ஒருவரான சி. எப். ஆண்ட்ரூஸ் என்பவர் பிற்காலத்தில் சாந்திநிகேதனத்தைச் சார்ந்தவராகவே மாறிவிட்டார்; தாகூரின் இணை பிரியாத் தோழராக ஆகிவிட்டார்.

நண்பர்கள் பலர் கூடிக்கூடித் தாகூரைப் போற்றி விருந்து அளித்தார்கள். அவர்களுடைய தூண்டுதலால் கீதாஞ்சலி அச்சிடப்பட்டது; அதன் வாயிலாக இங்கிலாந்தும் மற்ற நாடுகளும் அவரை அறிந்து கொள்ள முடிந்தது. பலரும் அவரைக் கவிஞர் என்று மட்டும் கொள்ளாமல், சமயத் தலைவராகவும் போற்றத் தலைப்பட்டார்கள். கீதாஞ்சலியின் அன்புப் பாடல்கள் அவ்வளவு சிறப்பாகப் போற்றப்பட்டன.

லண்டனிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார். சில பல்கலைக்கழகங்களில் சொற்பொழிவுகள் ஆற்றினார்; அரிய பல கருத்துக்களை எடுத்துரைத்தார்.

## நோபெல் பரிசு

அங்கிருந்து மீண்டும் இங்கிலாந்திற்குச் சென்று இந்தியாவுக்குத் திரும்பினார். 1913-ல் நவம்பரில்

சாந்திநிகேதனத்திற்குத் திரும்பிய பிறகு, இலக்கியப் பகுதிக்காக நோபெல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது என்ற செய்தி வந்தது. ஐரோப்பியர் அல்லாத வேறு எவர்க்கும் அதுவரையில் நோபெல் பரிசு வழங்கப்பட்டதில்லை. அந்த நிலையை மாற்றிய பெருமை தாகூரைச் சார்ந்தது. பரிசு பெற்றபின் அறிஞர்கள் அவரை முன்னிலும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். ஆனால் முன்பு பழித்து ஒதுக்கியவர்கள் இப்போது அவர்களோடு சேர்ந்து புகழ்ந்து சிறப்பிக்க முன்வந்த நிலையை நாட்டில் கண்டபோது அவருக்குத் துன்பமாக இருந்தது. இதற்குமுன் தம் நூல்களைப் பார்த்தும் படித்தும் அறியாதவர்கள் இப்போது இவ்வாறு போற்றுகின்றார்களே என்று எண்ணி நொந்தார்.

## வங்காளமும் போற்றியது

தாகூர் சிறந்த கவிஞர் என வங்காள நாட்டுப் பெரும் புலவர் பங்கிம்சந்திரர் புகழ்ந்து போற்றும் நிலைமை தொடக்கத்தில் ஏற்பட்டபோதிலும், வங்காளிகள் பொதுவாக அவரை உணரவில்லை என்றே கூறவேண்டும். உண்மையாக வங்காள மக்கள் அவரைப் போற்றத் தலைப்பட்டது மேற்கு நாட்டுப் பரிசு அவருக்கு வழங்கப்பட்ட பிறகே ஆகும். ஐரோப்பியர்கள் போற்றிப் புகழ்வதைக் கண்ட பின்னரே, இந்தியர்கள் இந்தியக் கவிமணியைக் கொண்டாடத் தொடங்கினார்கள்.

அவர் நோபெல் பரிசு பெற்றது 1912-ல் ஆகும். அதற்கு முந்திய ஆண்டுகளில் வங்காளி மொழியில் தேர்ந்த இலக்கணப் புலவர்கள் அவருடைய பாட்டுக்களை யும் எழுத்துக்களையும் குறைகூறிவந்தார்கள். இலக் கணம் தெரியாத கவிஞர் என்றும் இகழ்ந்தார்கள். தேர்வுகளில் மாணவர்களுக்குத் தரும் வினக்களில், "பிழை திருத்துக" என்ற வினவின்கீழ் தாகூரின் நூல்களில் கண்ட வாக்கியங்களைக் கொடுத்தார்கள்; அவ்வாறு செய்வதன் வாயிலாகத் தாகூரின் வாக்கியங் கள் பிழையானவை என்று மாணவர்கள் உணரும்படி செய்தார்கள். ஆனால் அந்த இலக்கணப் புலவர்கள் நோபெல் பரிசு பெற்றபின் வாய்திறக்காமல் வாளா இருந்துவிட்டார்கள். கல்கத்தா பல்கலைக்கழகமும் அவரைப் பாராட்ட முன்வந்தது; கல்லூரிப் பட்டம் பெறாத அவருக்கு 1913-ல் 'டாக்டர்' என்ற மதிப்புப் பட்டமும் வழங்கியது; பிறகு, பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு செய்யுமாறும் அழைத்தது; தாகூரும் அந்தச் சொற்பொழிவைத் தம் தாய்மொழியிலேயே ஆற்றினர்.

1915-ல் அரசாங்கம் அவருக்குச் சர் பட்டம் தந் தது. அந்தப் பட்டங்களுக்கு அப்பால் அவர் உலகப் புகழ் பெற்ற பெரிய கவிஞராக விளங்கினர். உலக மெல்லாம் அவருடைய பாடல்களையும் எழுத்துகளையும் படிக்க முன் வந்தது. கீதாஞ்சலி மொழிபெயர்ப்பே

இவ்வளவிற்கும் காரணமாகும். கீதாஞ்சலி மொழி பெயர்ப்பு வெளியாவதற்குக் காரணமான ஆங்கிலேய நண்பரின் நன்றியையும் தாகூர் மறக்கவில்லை. அந்த மொழிபெயர்ப்பு நூலில் உரிமையுரையான குறிப்பில் "ரோதென்ஸ்டினுக்கு" என்றே குறிப்பிட்டுள்ளார்.

## நோக்கமும் பற்றும்

மாகாணப் பற்றும் மொழிப் பற்றும் குறுகிய மனப்பான்மையை வளர்ப்பவை என்று இக்காலத்தில் சிலர் கருதுகிருர்கள். அது எவ்வளவு தவறு என்பதைத் தாகூரின் சீரிய வாழ்க்கை விளக்குகிறது. வங்காள மாகாணத்தை அவர் உயிர் போல் போற்றினர்; ஆனல் இந்திய நாட்டின் குறைகளைத் தீர்க்கவும் பெருமையைக் காக்கவும் அவர் எந்த நாளிலும் அஞ்சாமல் முன்வந்து கடமையைச் செய்துள்ளார். அது போலவே, வங்காள மொழிப் பற்று மிகுந்த அவர் தம் தாய்மொழியைப் போலவே உலகில் உள்ள எல்லோருடைய தாய்மொழிகளும் செழித்தோங்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டார். வங்காளிகள் வங்காளி மொழியில்தான் பேசவேண்டும், எழுதவேண்டும், கல்வி கற்கவேண்டும் என்று விடாப்பிடியாக வற்புறுத்தியவர் அவரைப் போல் வேறு எவரும் இல்லை. அவ்வாறே தமிழ்மாகாணத்திற்கு வந்திருந்த

போது, தமிழ்மக்கள் ஆங்கில மொழியில் பேசியும் எழுதியும் மயங்கி வாழ்ந்த வாழ்க்கையைக்கண்டபோது, அதைக் கடிந்து கூறித் திருத்த முனைந்தார்; தமிழ் மக்கள் தம் தாய்மொழியாகிய தமிழிலேயே பேசவேண்டும், எழுத வேண்டும், பாடவேண்டும் என்று வற்புறுத்துவதிலும் அவரே முன்னின்றார். மதுரைக்குத் தாகூர் வந்திருந்தபோது அறிஞர் இருவர் (அவருள் ஒருவர் இன்றும் சிறந்த தமிழ் எழுத்தாளராகவும் கவிஞராகவும் விளங்குபவர்) அவரைக் காணச் சென்றார்கள். காணச் சென்ற இருவரும் தாகூரைப் பற்றி ஆங்கிலத்தில் பாமாலை புனைந்துகொண்டு அவர்க்குச் சூட்டும் ஆர்வத்தோடு அணுகினார்கள். தாகூர்க்குத் தமிழ் தெரியாது. ஆகவே அவர்க்கும் தமக்கும் பொது மொழியாக உள்ள ஆங்கிலத்தில் புகழ்மாலை சூட்டுவதே தகுதி என்பது அவர்களின் எண்ணம். ஆனால் தாகூரின் உள்ளம் வேறு வகையானது; யார் யார் பாடினாலும், தம் தம் தாய்மொழியிலேயே பாடவேண்டும் என்று உறுதியாக வற்புறுத்தும் அவருடைய தூய நெஞ்சம், இதை வரவேற்கவில்லை. இருவரில் முதலில் ஒருவர் தம் ஆங்கிலப் பாட்டைப் பாடினார்; சிறிது நேரம் பொறுமையோடு கேட்ட கவிஞர், அவரை நோக்கி, “குயில் கிளியைப் போல் பாட முயற்சி செய்யக்கூடாது; குயில் தன் குரலாலேயே கூவவேண்டும். நீங்கள் உங்கள் தாய்மொழிலேயே பாடியிருக்கவேண்டும்” என்றார். இதைக் கேட்டதும் மற்றொருவர்

பாடிச் சென்றிருந்த ஆங்கிலப் பாட்டு இருந்த இடத்திலேயே அடங்கி யிருந்தது. இவ்வாறே எல்லா மாகாணத்தாருக்கும் அறிவுறுத்தி வந்தார். உலகம் வாழ வேண்டும் என்ற பரந்த நோக்கம் எவ்வாறு அவருக்கு இயல்பாக அமைந்திருந்ததோ, அவ்வாறே தம் மாகாணம் முன்னேற வேண்டும் என்றும் தம் தாய்மொழி ஓங்கி வளர வேண்டும் என்றும் உணர்ந்த கடமை யுணர்ச்சியும் இயல்பாக அமைந்திருந்தது.

தாகூர் ஆங்கிலத்தைக் கற்பதில் இளமையிலிருந்தே வெறுப்புக் காட்டிவந்த போதிலும், பிற்காலத்தில் அதன் பயனை உணர்ந்து முயன்று கற்றுக் கொண்டார்; நல்ல திறமும் பெற்றார். பொழுது போக்கிற்காக அவர் தம் பாடல்களை மொழிபெயர்த்த போதும், வெளியிட வேண்டும் என்ற எண்ணங் கொள்ளவில்லை. அந்த மொழிபெயர்ப்பை ஆங்கிலேயர்கள் பாராட்டக் கேட்ட பிறகும், தாம் எழுதுவன எல்லாவற்றையும் தம் தாய் மொழியாகிய வங்காளியிலேயே எழுதினார். நோபெல் பரிசு பெற்ற பிறகும் அவ்வாறே செய்தார். ஆண்ட்ரூஸ் என்ற ஆங்கில அறிஞருக்கு எழுதிய ஒரு கடிதத்தில், "உங்களுக்கு ஆங்கிலத்தில் அழகுபட எழுதுவது இயல்பாக வருவதுபோல் எனக்கு வரவில்லையே" என்று குறித்துள்ளார். கருத்தை வெளியிடுவதற்கு அவரவருடைய

தாய்மொழிபோல், வேறு எந்த மொழியும் எவ்வளவு பயின்ருலும் வராது என்பதே அவருடைய நம்பிக்கை. அதை வாழ்நாள்வரைக்கும் தம் எழுத்துக்களின் வாயிலாக உலகறியச் செய்து விளங்கினர்.

## வழிகாட்டும் இந்தியா

தாகூர் அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் போய்வந்தது முதல் உலகப்போருக்குச் சிறிது முன் பாகும். அந்த நாடுகளில் அறிஞர் பலருடன் பழகி நட்புக் கொள்ள வாய்த்தது பற்றி அவர் அளவிலா மகிழ்ச்சி கொண்டார். ஆயினும் அவருடைய உள்ளத்தில் பெருங்குறை ஏற்பட்டது. நாகரிகத்தைப் பெருக்கிக்கொண்டதாகப் பேசும் ஐரோப்பிய நாடுகள் ஒன்றை ஒன்று கண்டு அஞ்சியும் பகைத்தும் வாழும் போக்கு அவருக்குத் தெரிந்தது. தற்காப்பு என்று சொல்லி ஒரு நாட்டை அழிக்க மற்ருெரு நாடு படைதிரட்டிக் கொண்டுபோவதை அவர் அறவே வெறுத்தார். அழிவு வேலையில் போட்டியும் பொருமையும் வளர்வது நாகரிகம் அன்று என்றும், உலகக் கேட்டுக்கே வழி என்றும் தெளிந்தார். ஐரோப்பிய நாடுகளோ நேர்மாருக மயங்கியிருந்தன. இந்த மயக்கை அறுக்க இந்தியா வழிகாட்ட வேண்டும் என்று விரும்பினர்.

1914-ல் சி. எப். ஆண்ட்ரூஸ், பியர்ஸன் என்னும் ஆங்கிலேய அறிஞர் இருவரும் சாந்திநிகேதனத்திற்கு வந்து தொண்டாற்ற முன்வந்தார்கள். இதன் வாயிலாக உலக அமைதிக்கு வழிகோல முயலலாம் என்று தாகூர் பெருமகிழ்ச்சியுற்றார். 1915-ல் தென்னாப்பிரிக்காவோடு சாந்திநிகேதனத்திற்குத் தொடர்பு ஏற்பட்டது. தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் ஏற்படுத்திய போனிக்ஸ் பள்ளியின் மாணவர்கள் இந்தியாவிற்கு வந்து சாந்திநிகேதனத்தில் தங்கியிருந்தார்கள். காந்தியடிகளும் வந்திருந்தார். தாகூரும் காந்தியுமாகிய இந்திய நாட்டுப் பெருந்தலைவர் இருவர் கூடி அளவளாவிய முதல் கூட்டம் இதுவே. இதுமுதல் உலக அறிஞர்கள் தொண்டர்கள் ஆகியவரின் உள்ளத்தைச் சாந்திநிகேதனம் கவரத் தொடங்கியது.

## விசுவபாரதி

உலகப்போர் மூண்டது. தாகூர் எதிர்பார்த்தவாறே கொடுமைகளும் அழிவுகளும் பெருகின. அவற்றால் அவருடைய நெஞ்சில் துயரமும் கவலையும் மிகுந்தபோதிலும், நம்பிக்கையும் ஊக்கமும் தளரவில்லை. இந்த நம்பிக்கையின் பயனால் 1918–ல் சாந்திநிகேதனத்தில் விசுவபாரதி என்ற உலகப் பொதுவான நிலையத்தை - உலகக் கலைக்கழகத்தை - அமைத்தார்.

விசுவபாரதி பழங்காலத்து நலாந்தா பல்கலைக் கழகத்தைப் போல் உலகிற்குப் பயன்படவேண்டும் என்பது அவருடைய பேரவா. ஆண்ட்ரூஸ், பியர்ஸன் என்னும் ஆங்கிலேயர் இருவரும் சாந்திநிகேதனத்தில் தங்கி இத்துறையில் அவருக்குப் பெருந்துணையாக இருந்தார்கள். பிறகு 1920-ல் ஐரோப்பாவில் அவர் ஒரு சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, தம் நம்பிக்கை மெய்ப்படும் என மகிழ்ச்சி கொண்டார். இந்தியாவின் பல மாகாணக் கலைகளும் அதில் இடம் பெறச் செய்ததுபோலவே, சீனு, ஜப்பான் முதலான கிழக்கு நாடுகளின் கலைகளும் ஐரோப்பிய நாடுகளின் கலைகளும் அதில் இடம்பெறச் செய்தார். ஐரோப்பிய நாடுகளின் நாகரிகத்தை அடியோடு புறக்கணிக்கும் கருத்து அவருக்கு எப்போதும் இருந்ததில்லை. மேற்கு நாட்டு நாகரிகத்தைக் கண்மூடிப் பின்பற்றுவதும் தீமை; அதுபோலவே அடியோடு பழித்து ஒதுக்குவதும் தீமையே என்று உணர்த்திஞர். நன்மை தீமைகளை ஆராய்ந்து வேண்டியவற்றைக் கொள்ளவேண்டும் என்று தெளிவித்தார். விசுவபாரதிக்குள் சாதி சமயப் பிளவு எதுவும் புகாதபடி தூய்மையாகக் காத்தார். எல்லாச் சமயத்தாரும் எல்லா இனத்தாரும் 'மனிதர்' என்ற பொதுத்தன்மை விளங்க வாழவேண்டும் என்று ஆர்வம் கொண்டார். உணவுவிடுதிகளில் எவ்வகையான வேறுபாடும் நுழைந்து பிரிவுபடுத்தாதபடி செய்தார்.

வழிபாடு முதலியவற்றில் எந்தக் கட்டுப்பாடும் விதிக்காமல் முழு உரிமை நிலவச் செய்தார்.

## ஜப்பான் சுற்றுதல்

1916-17-ல் ஜப்பான் நாட்டிற்குத் தாகூர் புறப்பட்டார். அங்கே அவருக்கு மிகச் சிறந்த முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பல கூட்டங்களில் கவிஞர் பேசினர். ஜப்பான் நாட்டுக் கவிஞர்களோடும் மற்றக் கலைஞர்களோடும் பழகி நட்புக்கொண்டார். ஜப்பானியர்களின் உள்ளத்தில் குடிகொண்டிருந்த அழகுணர்ச்சியைப் பாராட்டினர்; ஆயினும் அவர்களின் அரசியலில் காணப்பட்ட பகையையும் மண்ணாசையையும் வெறுத்தார். சீனர்களிடம் அவர்கள் நடந்துவந்த போக்கைக் கடிந்தார். டோகியோ பல்கலைக் கழகத்தில் அவர் நாட்டுணர்ச்சியைப் பற்றி ஆற்றிய சொற்பொழிவுகள் புதிய உண்மைகளைத் தெளிவாக்கின. அவை நூல்வடிவில் வெளியிடப்பட்டன. இப்போது தேசபக்தி என்ற பெயரால் உலக அமைதிக்கும் நாட்டு முன்னேற்றத்திற்கும் கேடு சூழும் தவருன உணர்ச்சியை அவற்றில் தெளிவுறக் கடிந்துள்ளார். அதன் பயனுக, ஜப்பானிய மக்களும் அரசியலாரும் அவரிடம் புறக்கணிப்பைக் காட்டத் தொடங்கினர்கள். அவர்க்கு முன்போல் சிறப்பும் மதிப்பும் கொடுக்காமல்

புறக்கணித்தார்கள். ஆயினும் கவிஞர் அதைப் பொருட்படுத்தாமல் பயணத்தை முடித்து விரைவில் மீண்டார்.

## பட்டம் துறத்தல்

சாந்திநிகேதனத் தொண்டு அமைதியாக நடைபெற்றுவந்தது. ஆனால் இடையிடையே சிறுசிறு இடையூறுகள் நேர்ந்துவந்தன. அவருடைய மூத்த மகள் 1918-ல் இறந்தபோது தாகூர் துயரத்திற்குள்ளானார். அதையும் கடந்து தொண்டு செய்துவந்த அவருடைய நெஞ்சை வருத்திய நிகழ்ச்சி 1919-ம் ஆண்டில் அமிருதசரசில் ஜெனரல் டயர் என்னும் ராணுவ அதிகாரி நடத்திய படுகொலையே ஆகும். ஜலியன்வாலாபாக் என்னும் இடத்தில் திரண்ட கூட்டமான மக்களைச் சுட்டுத் தள்ளிய அவனுடைய கொடுஞ் செயல் அவரை வெகுண்டு எழச் செய்தது. உடனே கல்கத்தாவிற்குச் சென்று எதிர்ப்புணர்ச்சியைத் திரட்டிக் கூட்டம் நடத்தப் பாடுபட்டார்; ஆனால் அரசியல் தலைவர்கள் எல்லோரும் அஞ்சிப் பின்வாங்கினார்கள். அதனால் தனியாகவே நின்று தம் எதிப்பை அரசாங்கத்தார்க்குத் தெரிவித்தார். வைசிராய்க்குக் கடிதம் எழுதி முன்பு தமக்கு அளித்த 'சர்' பட்டத்தை உதறினார். இந்தியன் என்ற முறையிலும் அல்லாமல், மனிதன் என்ற முறையிலேயே ஆங்கில அரசாங்கத்தின் இந்த

அநாகரிகக் கொடுமையைக் கண்டிப்பதாகத் தெரிவித்து, அத்தகைய அரசாங்கத்தார் வழங்கிய எந்தப் பட்டத்தையும் மதிப்பையும் ஏற்பது தமக்கு அவமானம் என்று எழுதினார்.

## கிராம முன்னேற்றம்

கிராம முன்னேற்றத்திற்கான தொண்டு செய்ய வேண்டும் என்ற ஆர்வம் கவிஞர் தாகூரிடம் என்றும் இருந்துவந்தது. தம் மூத்த மகன் ரதீந்திரநாதரை அந்த நோக்கத்தோடு அமெரிக்காவிற்கு அனுப்பி உழவைப் பற்றி மூன்று ஆண்டுகள் படித்துவருமாறு செய்தார். எல்மிர்ஸ்ட் என்ற ஆங்கிலேயர் ஒருவரும் இந்த முயற்சிக்குத் துணையாகக் கிடைத்தார். அவர் இங்கிலாந்தின் கிராமங்களில் தொண்டுசெய்து பழக்கப் பட்டவர் ; அமெரிக்காவிலும் வாழ்ந்து அனுபவம் பெற்றவர். இவர்களின் பொறுப்பில் கிராமத்தொண்டைத் தொடங்கத் திட்டமிட்டார். கிராமங்களே பெருகியுள்ள இந்தியா போன்ற நாட்டில், கிராமங்கள் வளம்பெறாவிட்டால், நாட்டுமுன்னேற்றம் என்பது வெறுங்கனவாகும் என்று உணர்ந்தார். ஆகையால் விசுவபாரதியில் கற்பிக்கும் கலைகளில் கிராமத்தொண்டு என்பதும் ஒரு கலையாகச் செய்தார். சாந்திநிகேதனத்திற்கு அருகில் இரண்டுமைல் தொலைவில் சுருள் என்ற

சிற்றூரில் ஒரு வீடு முன்பே அவருக்காக வாங்கப்பட்டிருந்தது. அதைக் கிராமத்தொண்டுக்கு உரிய தலைமை நிலையமாக மாற்றி, " ஸ்ரீநிகேதன் " என்ற பெயரால் 1922-ல் செயல்முறை தொடங்கப்பட்டது.

அந்த வீட்டில் நூல்நிலையமும் ஆபீசும் அமைத்து, சுற்றிலும் தொண்டர்களுக்கு வீடுகள் அமைக்கப்பட்டன. உழவுத்துறையில் முன்னேற்றங்கள் காணுமாறு கவிஞர் தூண்டினார். சிறந்த வகையில் நெல்லும் கரும்பும் பயிராயின. மரமே இல்லாமல் பொட்டலாகக் கிடந்த அந்தப் பகுதியில் மரங்கள் பல வைத்துச் செழிக்கச் செய்தார்கள். கூட்டுறவுக் கழகங்கள் பல அமைந்தன. கிராமங்களில் ஒவ்வொரு குடும்பமும் கூட்டுறவுக் கழகத்தில் உறுப்பாகச் சேர்ந்தது. இதில் கட்டும் கட்டணத்தில் ஒரு பகுதியைக் கொண்டு கிராம சுகாதாரமும் வைத்தியமும் ஏற்பாடு செய்யப்பட்டன. குடும்பத்தார் வைத்தியருக்குத் தனியாகப் பணம் தரவேண்டிய நிலைமை இல்லை. வைத்தியர் கிராமத்தில் கிராம மக்களிடையே வாழ்ந்துவர ஏற்பாடாயிற்று. நோய் வந்தபின் மருந்து கொடுக்கும் வேலை மட்டும் அல்லாமல், நோய் வாராமல் மக்களை நலமுறக் காக்கும் பொறுப்பும் அவரைச் சேர்ந்தது. இந்த நன்முயற்சியால் சுற்றுப்புறத்தில் விடாமல் பரவிவந்த மலேரியா குறைந்துவிட்டது. நோய் வந்தபின் மருந்து கொடுத்து

உதவுவதால் மட்டுமே வைத்தியருக்குப் பணம் கிடைக்கும் என்ற நிலைமை மிகத் தீமையானது. அதனால் பண ஆசை கொண்ட வைத்தியர்கள் மக்களிடையே நோய் வளர்ந்தால்தான் தமக்குச் செல்வம் வளரும் என்ற தவறான போக்கில் சென்று, வருமுன் காக்கும் வேலையில் கவலைப்படாமல் இருப்பது வழக்கம். ஆனால் இந்தப் புதிய ஏற்பாட்டின்கீழ் அது எளிதில் மாறி விட்டது. ஒவ்வொரு குடும்பமும் ஆரோக்கியமாக இருப்பதற்காகவே கூட்டுறவுக் கழகத்தில் கட்டணத் தொகை கட்டிய காரணத்தால், ஆரோக்கியத்தைக் காப்பதிலேயே வைத்தியரின் கடமை இருந்தது; நோய் வராமல் இருந்தாலும் தம் வருவாய்க்குக் குறை இல்லை என்ற நல்ல உணர்ச்சியைப் பெற்றுப் புதிய வகையில் தொண்டு செய்துவர முடிந்தது.

## கிராமத் தொண்டர்படை

கிராமத்து ஆசிரியர்களின் குறைகளை உணர்ந்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து, அவர்களுடைய கல்வித்தொண்டு வளரும்படியாகவும் தாகூர் ஏற்பாடு செய்தார். கிராம முன்னேற்றத் தொண்டர்களுக்கும் கிராம ஆசிரியர்களுக்கும் தொடர்பு இருக்குமாறு அமைத்தார்.

கிராமப் பள்ளிக்கூட மாணவர்களுக்குத் தொண்டர்படை அமைத்துக் கொடுக்கப்பட்டது. மாணவர்கள் அதில் சேர்ந்து கூட்டுறவு முறையில் பல நன்மைகளைத் தமக்குச் செய்துகொள்ள முடிந்தது. தொண்டர்படையினர் போற்றும் விதிகளை அடக்கி நான்கடியில் கவிஞர் ஒரு பாட்டு எழுதி உதவினார். கிராமமக்களுக்குத் துன்பம் நேர்ந்தபோதெல்லாம் அந்தக் கிராமத்துத் தொண்டர்படை முன்நின்று தொண்டு செய்து உதவியது. பயனுள்ள பல துறையில் மாணவத் தொண்டர்கள் பழகினார்கள். உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருக்கக் கற்றார்கள். உடலில் வற்றாத உரமும் உள்ளத்தில் குன்றாத ஊக்கமும் இருக்குமாறு பழக்க வழக்கங்களைக் கற்றார்கள். மரஞ் செடி கொடிகளைப் பெருக்கி வளர்ப்பதும் தொண்டர்படையின் கடமை ஆயிற்று. காய்கறித் தோட்டம் வைத்துத் தமக்கும் பிறர்க்கும் நன்மை தேடிக்கொண்டார்கள். ஒவ்வொரு தொண்டரும் வீட்டில் ஒவ்வொரு காய்கறித் தோட்டம் வைத்திருக்க வேண்டும் என்றும், தொண்டர்படைக்குப் பொதுவாகப் பொது இடத்தில் ஒரு காய்கறித் தோட்டம் இருக்கவேண்டும் என்றும் ஏற்பாடு ஆயிற்று. பொதுத் தோட்டத்து விளைவுகளைச் சந்தையில் விற்றுப் பள்ளிக்கூடப் புத்தகங்கள் வாங்கினார்கள். வைத்தியரிடமிருந்து நோயாளிகளின் வீட்டைத் தேடி மருந்து கொண்டுபோய்க்

கொடுப்பதும் மற்ற உதவிகள் செய்வதும் தொண்டர் படையின் கடமைகள் ஆயின. கடமைகள் மட்டும் அல்லாமல், பொழுதுபோக்குகள் பல ஏற்பாடு செய்யப் பட்டன. தொண்டர்படையின் மகிழ்ச்சிக்கும் கிராம மக்களின் களிப்புக்கும் உரிய விளையாட்டுக்கள் பல பெருகின; கதைகள், பாடல்கள், நாடகங்கள் முதலியன பல மகிழ்ச்சி தந்தன.

## மாணவர் தேர்ச்சி

பல கிராமங்களிலும் இவ்வாறு கற்றுத் தேரும் மாணவர்களில் சிலர், தலைமைநிலையமாகிய ஸ்ரீநிகேத னத்தில் சிலகாலம் வந்து தங்கிப் பயன் அடைவதும் வழக்கமாயிற்று. அங்கே பல கிராமங்களுக்கும் பொது வான உயர்நிலைப் பள்ளிக்கூடமும் உணவுவிடுதியும் அமைந்தன. எட்டு அல்லது ஒன்பது வயதில் அங்கு வந்து சேரும் மாணவர்கள் பதினைந்து பதினாறு வயது வரைக்கும் தங்கிக் கற்றார்கள். வங்காள இலக்கியமும் வங்காள வரலாறும் அங்கே கற்பிக்க ஏற்பாடு ஆயிற்று. உலகச் செய்திகளை அறிந்தும் வாழ்க்கை வரலாறுகளைப் படித்தும் மாணவர்களின் அறிவு வளர ஏற்பாடு செய் தார்கள். கைத்தொழில்களும் இங்குக் கற்பிக்கப் பட்டன. ஆனால் மார்க்கு வாங்கித் தேறவேண்டிய பொதுப்பரீட்சை முறை இங்கு இல்லை.

பரீட்சை முறை மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையானது என்பது கவிஞரின் கொள்கை. அறிவை வளர்ப்பதில் உரிமையுணர்ச்சி இன்றியமை யாதது என்றும், இல்லையானுல் கல்வி என்பது கட்டாய உணவு முதலியனபோல் தீமைசெய்யும் என்றும் அவர் உணர்ந்தார். சாந்திநிகேதனப் பள்ளிக்கூடத்தில் மற்ற வர்களின் விருப்பத்திற்கு இணங்கித் தொடக்கத்தில் மெட்ரிகுலேஷன் பரீட்சைத் திட்டப்படி கல்விமுறை அமைத்திருந்தார். ஆனல், முதலிலிருந்தே அவ ருடைய மனத்தில் அதை எதிர்த்துப் போராட்டம் நடந்துவந்தது. நடைமுறையில் சில ஆண்டுகள் அதன் தீமையை உணர்ந்ததும், மெட்ரிகுலேஷன் பரீட்சை யோடு சாந்திநிகேதன மாணவர்களுக்குத் தொடர்பே கூடாது என்ற முடிவிற்கு வந்தார். அப்போதும் மற்றவர்கள் இணங்கவில்லை. மீண்டும் பொறுத்தார். அவர் 1920-ல் ஐரோப்பாவிற்குப் புறப்பட்டுக கப்ப லேறிய பிறகே, சாந்திநிகேதன ஆசிரியர்கள் கவிஞரின் உள்ளக் கருத்தை உணர்ந்து அதன்படி நடத்த முன் வந்தார்கள். கப்பலில் போய்க்கொண்டிருந்த கவிஞர்க் குத் தபால்வாயிலாக இந்தச் செய்தி எட்டியபோது, அவர் மிக்க மகிழ்ச்சியுற்ருர்; சாந்திநிகேதனத்திலிருந்த பெரிய குறை தீர்ந்துவிட்டதாக உணர்ந்து மகிழ்ந்தார்.

# 5. உள்ளத்தின் ஒளி

## உலக இலக்கியம்

தாகூரின் பாட்டல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க் கப்பட்டு அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் வெளி யிடப்பட்டன. பலவகைக் கடமைகளுக்கு இடையே அவர்தம் நூல்களின் பதிப்பிலும் வெளியீட்டிலும் காலம் செலுத்திவந்தார். பாடல்களைப் போலவே, அவருடைய சிறுகதைகள், நாவல்கள், சொற்பொழிவு கள் எல்லாம் பல பதிப்புக்கள் அச்சிடப்பட்டுப் பரவின. விசுவபாரதியின் நிகழ்ச்சிகளை உலகம் அறியும் பொருட்டு, மூன்று திங்களுக்கு ஒருமுறை 'விசுவ பாரதி' என்ற பெயரால் இதழ் ஒன்று வெளியிட்டார். அதன் ஆசிரியராக இருந்ததுமட்டும் அல்லாமல், அதில் கட்டுரைகளும் பாட்டுக்களும் எழுதிவந்தார். வாழ் நாள் வரையில் ஒவ்வோர் இதழிலும் ஒரு கட்டுரை யாவது ஒரு பாட்டாவது விடாமல் எழுதிவந்தார்.

அவருடைய சிறுகதைகள் சுவை மிகுந்த கதை கள்; காபூலிவாலா முதலான பல கதைகளும் படிப் பவரின் உள்ளத்தைக் கவரும் சிறப்பு வாய்ந்து விளங்கு கின்றன. அவற்றில் அவருடைய நகைச்சுவையும்

வேடிக்கை யுணர்வும் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு சிறுகதையும் ஒவ்வொரு பண்பை விளக்கி, ஆசிரியரின் உள்ளத்தைப் புலப்படுத்துகின்றன. தாகூர் தம் வாழ்க்கையில் கண்டும் கேட்டும் அறிந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு இத்தகைய உணர்வு மிக்க கதைகள் பல எழுதியுதவினர்; அவைகள் இன்று இலக்கிய மணி களாகத் திகழ்கின்றன.

புதிய சிறுகதை ஒன்றைத் தாகூர் எழுதி முடித் ததும் மாலைநேரத்தில் தம் நண்பர்களையும் மாணவர் களையும் சேர்த்து அவர்களிடையே இருந்து தாமே படித்துக் காட்டி, அவர்களோடு சேர்ந்து சிரித்து மகிழ் வார். அவருடைய இனிய குரலும் தெளிவான ஒலி யும் உணர்வு மிக்க உள்ளமும் சேர்ந்து, கதைக்கு உயிர் ஊட்டிக் கேட்பவர் எல்லோரையும் மகிழ்விக்கும்.

தாகூரின் கதைகளும் நாவல்களும் இந்திய மக்களின் வாழ்க்கையை - சிறப்பாக வங்காள கிராம மக்களின் வாழ்க்கையை - தெள்ளத் தெளிய விளக்கு கின்றன. ஒரு சிறப்பும் இல்லாத எளிய நிகழ்ச்சிகள்- அன்றாட வாழ்க்கையில் காணும் சிறு சிறு நிகழ்ச்சிகள்- அவருடைய கற்பனை ஒளிபட்டதும் உணர்ச்சிமிக்க கதைகளாக மாறிவிடுகின்றன; அழியாத இலக்கிய வாழ்வு பெற்றுவிடுகின்றன. தாகூரின் புலமையை

அவருடைய பாட்டுக்கள் விளக்குவதுபோலவே, இத்தகைய கதைகளும் விளக்கிநிற்கின்றன.

## பாடல் தொண்டு

நோபெல் பரிசு பெற்ற பிறகு அவருடைய வாழ்க்கையில் கடமைகள் பற்பலவாகி ஓய்வில்லாமல் நெருக்கின. ஆயினும் அவர் கடமைகளை அளவுக்கு மீறிப் பெருக்கிக்கொள்ளாமல் காத்துக்கொண்டார். தம்மைச் சுற்றியுள்ள சிறுசிறு பொருள்களையும் நோக்கி அவற்றின் அழகையும் அருமையையும் கண்டு உணர்ந்து இன்புறத் தவறியதில்லை. இதையே சிறந்த வாழ்நாள் கடமையாகக் கொண்டிருந்தார் என்றும் கூறலாம். அதனால்தான் எத்தனையோ வேலைகளுக்கு இடையிலும் இடையறாமல் அழகிய பாட்டுக்களைப் பாடிக் கலைத் தொண்டு செய்ய அவரால் முடிந்தது.

பாட்டுக்கள் எழுதுவதில் அவருடைய அனுபவம் எத்தகையது என்பதை அவர் 1892-ல் எழுதிய பழங் கடிதம் ஒன்று நன்றாக விளக்குகின்றது :

> இங்குக் கோயில் மணி ஒன்றும் அடிப்பதில்லை. அருகில் மக்கள் வாழும் பகுதி ஒன்றும் இல்லாமையால், மாலை ஆனதும் பறவைகள் பாடலை நிறுத்திய வுடனே, முழு அமைதி நிலவுகிறது. முன்னிரவுக்கும் நள்ளிரவுக்கும் இங்கே

பெரிய வேறுபாடு இல்லை. கல்கத்தா நகரத்தில் உறக்கம் இல்லாதபோது, இரவு என்பது இருள் என்ற பெரிய ஆறு மெல்ல ஓடுவதுபோல் தோன்றும்; அதன் ஓட்டத்தில் எழும் பலவகை ஒலிகளையும் ஒருவர் படுக்கையில் மல்லாந்து படுத்தபடியாகவே கேட்டுக்கொண்டிருக்கலாம் ஆனால் இங்கே இரவு என்பது, அமைதியாக அடங்கியிருக்கின்ற, அசைவின் அறிகுறியே இல்லாத, பெரிய ஏரிபோல் இருக்கின்றது. நேற்று இரவு நான் படுக்கையில் இப்பக்கமும் அப்பக்கமும் திரும்பித் திரும்பிப் பொழுது போக்கினேன்; ஏதோ மிகுதியாகத் தேங்கி நிற்பது போன்ற நிலையில் கிடந்தேன்.

இன்று காலையில் வழக்கமாக எழும் நேரத்தில் எழாமல், சிறிது நேரம் கழித்தே படுக்கையிலிருந்து எழுந்தேன். கீழடுக்கில் என் அறைக்கு வந்து தலையணையின்மேல் சாய்ந்துகொண்டு, ஒரு காலை மற்றொரு முழங்கால்மேல் இட்டபடி கிடந்தேன்.

ஒரு கரும்பலகையை எடுத்து மார்பின்மேல் வைத்துக்கொண்டு, காலைத் தென்றலும் பறவைகளின் இசையும் தொடர, பாட்டு ஒன்று எழுதத் தொடங்கினேன். என் முயற்சி வெற்றியாகவே நடைபெற்றுக்கொண்டிருந்தது; என் இதழ்களில் புன்முறுவல் நிற்க, கண்கள் பாதி மூடியபடி இருக்க, பாட்டின் ஒலி நயத்திற்கு ஏற்ப என் தலை அசைய, என் முணுமுணுப்பு பாட்டுருவாக அமைந்துகொண்டிருந்தது; ஆனால் தபால் வந்து குறுக்கிட்டது.

ஒரு கடிதம், 'சாதனு' பத்திரிகையின் கடைசி இதழ், இன்னும் சில அச்சுத் தாள்கள் ஆகியவை வந்தன. கடிதத்தைப் படித்தேன். சாதனுவின் கிழிக்கப்படாத பக்கங்களுக்குள் பார்த்தேன். மறுபடியும் தலை அசைத்துக்கொண்டும் முணுமுணுத்துக் கொண்டும் பாட்டு எழுதத் தொடங்கினேன். அதை முடிக்கும் வரைக்கும் நான் வேறு எதுவும் செய்யவில்லை.

பக்கம் பக்கமாக உரைநடை எழுதிய போதிலும், ஒரு பாட்டு எழுதுவதற்கு ஈடான மகிழ்ச்சி தருவதில்லை. என்ன காரணமோ? வியப்பாக இருக்கிறது. பாட்டில் ஒருவருடைய உணர்ச்சிகள் அத்தகைய விழுமிய வடிவம் பெறுகின்றன. கைவிரல்களால் தொட்டு எடுக்கக்கூடியவை போல் அவைகள் அமைகின்றன. ஆனால் உரைநடை என்பது ஒட்டாத பொருள்களை ஒரு கோணிப்பை நிறைய அடைத்திருப்பது போல், கனமாகவும் கையாள முடியாததாகவும், விருப்பம் போல் அசைக்க இயலாததாகவும் இருக்கின்றது.

நாளுக்கு ஒரு பாட்டு எழுதி முடிக்கக் கூடுமானல், என் வாழ்வு ஒருவகை இன்பமாகவே நடைபெறும். ஆனல் பல ஆண்டுகளாக நான் விடாமல் பாட்டோடு பழகியும், அது எனக்கு நன்கு பழக்கப்பட்டதாக ஆகவில்லை. கடிவாளம் இட்டு என் விருப்பம்போல் ஏறிச் செலுத்தக் கூடிய பறக்கும் குதிரையாக அது அமையவில்லை. கற்பனைக்கு ஏற்றபடி தொலைவில் பறந்து செல்லும் உரிமையில்தான் கலையின் இன்பம் அமைந்திருக்கிறது. அதன்பிறகு, இந்த

உலகச் சிறைக்குள் திரும்பிப் புகுந்த பிறகும் அந்த இன்பம் செவியில் ஒலித்துக்கொண்டிருக்கிறது; மனத்திலும் ஊறிக் கொண்டிருக்கிறது.

சிறு சிறு பாட்டுக்கள் தாமாகவே, நான் முயற்சி செய்யாமலே, என்னிடம் வந்து அமைகின்றன; நாடகம் எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும்போது அவை தடையாக வந்து நேர்கின்றன. இந்தப் பாட்டுக்கள் குறுக்கே வராமலிருந்தால், என் மனத்தில் வந்து தூண்டும் இரண்டு மூன்று நாடகத்திற்கு உரிய கருத்துக்களுக்கு வரவேற்புக் கொடுத்திருப்பேன். ஆனுல், குளிர்காலம் வரும் வரையில் காத்திருக்க வேண்டுமோ என அஞ்சுகிறேன். "சித்ரா" தவிர, எல்லா நாடகங்களையும் குளிர்காலத்தில்தான் எழுதி முடித்திருக்கிறேன். அக்காலத்தில், பாட்டுக்கு உரிய உணர்ச்சி குளிர்ந்துவிடும்போல் தெரிகிறது; அதனுல்தான் அப்போது நாடகம் எழுத ஓய்வு கிடைக்கிறது போலும்.

(1892 - மே - 16-ல் போல்பூரிலிருந்து எழுதியது)

## நாடகத் தொண்டு

நாடகக் கலைக்குத் தாகூர் ஆற்றிய தொண்டும் ஒப் புயர் வற்றது. இளஞ் சிறுவனுக இருந்தபோது, தம் வீட்டிற்கு மாலை நேரத்தில் புதிதுபுதிதாகப் பலர் வந்து போனதையும், பிறகு வீட்டிலேயே ஒரு பக்கத்தில் தம் அண்ணன்மார் பல்வகையாகப் புனைந்துகொண்டு வந்து ஆடல்பாடல் நிகழ்த்தியதையும் அவர் அடிக்கடி வியப்போடு பார்த்திருக்கின்றுர். நாடகமேடைக்குத்

தொலைவில் நின்றுகொண்டு கண்ட இந்தக் காட்சிகள் அவருடைய நினைவைவிட்டு நீங்கவில்லை. இளைஞராக வளர்ந்ததும், நாடகமேடையிலேயே தம் அண்ணன்மாரோடு கலந்து நடித்துத் தொண்டு செய்யும் வாய்ப்பைப் பெற்றார். அதன்பிறகு சில ஆண்டுகளில் தாமே புதிய புதிய நாடகங்களை எழுதும் ஆசிரியராகவும் விளங்கினார். அப்போதும் அவர் நாடமேடையை மறக்கவில்லை. மேடை ஏறி நடிக்கும் கலை, எப்போதும் அவருக்கு விருப்பமான கலையாக இருந்தது. முதல்முதல் அவர் நாடகம் எழுதியது அவருடைய பத்தொன்பதாம் வயதில். 'வால்மீகி பிரதீபம்' என்ற அந்த முதல் நாடகத்தை வீட்டிலேயே நடித்தபோது, அவரே வால்மீகராக மேடையில் விளங்கினார். முதுமையுற்ற பிறகும் நடிப்புத்திறனில் அவருக்கு இருந்த இந்த ஆர்வம் சிறிதும் குறையவில்லை; இயன்றபோதெல்லாம், சாந்திநிகேதன நாடக மேடையில் விளங்கிவந்தார்.

## நிதி திரட்டல்

விசுவபாரதியை வளர்க்கும் பொருட்டு அவருடைய முதுமையிலும் பல நாடுகளுக்கும் இந்தியாவிலேயே பல மாகாணங்களுக்கும் ஓய்வில்லாமல் சென்று உழைக்க வேண்டியதாயிற்று. அறுபது வயது நிறைந்த பிறகும் அவர் பதினைந்து ஆண்டுகள் விடாமல்

மாகாணம் மாகாணமாக நாடு நாடாகச் சுற்றினார். விசுவபாரதியை அவருடைய ஆவலின்படி வளர்ப்பதற்கு வேண்டிய பொருள்வளம் இல்லாத குறையால் தான் இவ்வாறு உழைக்க நேர்ந்தது. 1936-ல் தாகூர் டில்லிக்குச் சென்றிருந்த காலத்தில் அங்கே காந்தியடிகள் அவரைக் கண்டு அளவளாவியபோது, எழுபத்தைந் தாம் வயதில் இந்த நாட்டுப் பெருங் கவிஞர் - பெருங் கலைஞர் - இவ்வாறு ஊர்சுற்றிப் பணந்திரட்டி உழைக்க வேண்டியிருக்கின்றதே என்று வருந்தினார். இந்த நாடு இப்படிப்பட்ட நிலையில் உள்ளதே என்று வருந்திய அளவில் காந்தியடிகள் நிற்கவில்லை. அப்போதே தாகூரின் கையில் அறுபதினாயிர ரூபாய் தருமாறு ஒரு செல்வரைத் தூண்டினார். அதைப் பெற்றுக் கவலையில்லாமல் கவிஞர் சாந்திநிகேதனத்திற்குத் திரும்பவேண்டும் என்று காந்தியடிகள் ஏற்பாடு செய்து அனுப்பினார்.

## கற்பனைவளம்

தாகூரின் கற்பனைவளம் உலகத்து அறிஞர் எல்லோரும் போற்றத்தக்க பெருமை உடையது. உயர்வுநவிற்சி மிகுதியாக இல்லாமல், கண்டும் கேட்டும் தாம் உணர்ந்தவற்றைக் கற்பவரின் மனக் கண்ணிற்குக் காட்டவல்ல கற்பனைச் சொல்லோவியங்களை அவருடைய பாடல்களில் மட்டும் அல்லாமல், கடிதங்களிலும்

காணலாம். எடுத்துக்காட்டாக இரண்டு கடிதங்கள் வருமாறு:—

வெட்ட வெளியில் கிடக்கும் கடல் அலைந்து புரண்டு நுரை கக்குகிறது. அதைப் பார்க்கும்போதெல்லாம், கட்டுண்டு வருந்தும் பெரிய பூதம் போன்ற தோற்றம் மனத்தில் எழுகிறது. அந்தப் பூதத்தின் அங்காந்த வாய்க்கு எதிரே, கடற்கரையில், நாம் நம் வீடுகளை அமைத்துக்கொண்டு, அது புரள்வதைப் பார்க்கின்றோம். என்ன வலிமை! அளவற்ற வலிமை! ஓர் அரக்கனுடைய தசைநார்களைப் போல் அல்லவா அலைகள் எழுந்து எழுந்து அசைகின்றன?

படைப்புக் காலந் தொட்டு நிலத்திற்கும் நீருக்கும் இந்தப் போர் நடந்தேவருகிறது. உலர்ந்த நிலம் மெல்ல மெல்லத் தன் பகுதியை விரிவுபடுத்திக்கொள்கிறது; தன் குழந்தைகளாகிய உலகமக்களுக்கு வாழ்விடம் பெருக்கித் தருகிறது. ஆனால் நீர்ப்பகுதியாகிய கடலோ தன் இடம் பறிபோவதை உணர்ந்து பின்வாங்கிப் பின்வாங்கிச்சென்று கூக்குரலிடுகிறது; விம்மி அழுகிறது; துயருற்றுத் தன் மார்பை அடித்துக்கொள்கிறது. ஒரு காலத்தில் கடலே எல்லாமாக, தனிச் செங்கோலோச்சி, முழு உரிமையோடு விளங்கியது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். நிலம் கடலின் வயிற்றிலிருந்து பிறந்த குழந்தை, தாயின் அரியணையைக் கைப்பற்றிக் கொண்டது; அதுமுதல் பெற்ற தாய் பித்துப் பிடித்தவளாய், நுரை நுரையாய்க் கக்குகிறாள்;

ஓயாமல் அழுது விம்முகிறாள்; தன்னந் தனியே புயலில் சிக்குண்டு வருந்திய லியர்மன்னன்போல் துயருறுகிறாள்.

(1885 - அக்டோபரில் எழுதிய கடிதம்)

மாலையில் தனியாக மாடியில் நிலாமுற்றத்தில் உலாவுவது என் வழக்கம். நேற்றுப் பிற்பகலில் வீட்டிற்கு வந்தவர்களை அழைத்துச் சென்று இந்த இடத்தின் இயற்கைக் காட்சிகளைக் காண்பிக்க வேண்டியது என் கடமை என்று உணர்ந்தேன். அதனால் அகோர் என்பவனை வழிகாட்டியாக அழைத்துக்கொண்டு, அவர்களோடு வெளியே புறப்பட்டுச் சென்றேன்.

வானத்தின் அடிவாரத்தில், தொலைவில் கண்ட மரங்களின் உச்சி நீல நிறமாகத் தோன்றிய திசையில், கருநீலமான மேகத்தின் மெல்லிய ஒழுங்கு அந்த மரங்களின்மேல் அழகாக விளங்கியது. நான் கற்பனையுணர்வோடு விளக்க முயன்றேன்; அழகிய நீலநிறக் கண்ணின் மேல் புருவத்தில் தீட்டப்பட்ட மைபோல் அது விளங்குவதாகக் கூறினேன். என் நண்பர்களில் ஒருவர்க்கு அது கேட்கவில்லை; இன்னொருவர்க்கு அது விளங்கவில்லை; மற்றொருவர், "ஆமாம்! மிக மிக அழகானது!" என்று சொல்லி முடித்துவிட்டார். அதற்குமேல், கவிதை உணர்வோடு எண்ணவும் பேசவும் எனக்கு ஊக்கம் பிறக்கவில்லை.

(1892 - மே - 12-ல் போல்பூரிலிருந்து எழுதிய கடிதம்)

## போரை வெறுத்தல்

தாகூர் இந்த உலகத்தில் மிகமிக வெறுத்த ஒன்று எது என்ருல், அது போர் என்னும் அரசியல்வெறியே ஆகும். போரைக் கடிந்து எழுதியும் பேசியும் வெறுத்த காரணத்தை வைத்துக்கொண்டு இங்கிலாந்தில் இருந்த சிலர் அவரைத் தூற்றவும் தலைப்பட்டார்கள். சில பத்திரிகைகளும் அவரைப் பற்றித் தாறுமாருக எழுதின. அவற்ருல் தாகூர் சிறு வருத்தம் உற்ற போதிலும், தம் கொள்கையை விடாமல் வலியுறுத்தியே வந்தார்.

போர் நடந்து முடிந்தபின், கவிஞர் பிரஞ்சு நாட்டிற்குச் சென்றபோது அங்குப் பாழடைந்த ஊர்கள் பலவற்றைக் கண்டு வருந்தினர். போர் குடும்பம் குடும்பமாக மக்களை அழிப்பதோடு நிற்காமல் ஊர் ஊராகவும் அழித்த கொடுமைகளைக் கண்ணாரக் கண்டார். போரில் மாண்டு குவிந்த ஆயிரக்கணக்கான வீரர்களின் உடம்புகளைப் புதைத்து எழுப்பிய கல்லறைகள் கணக்கற்றவை ஐரோப்பாவில் கண்ட இடமெல்லாம் இருப்பதைப் பார்த்து இறந்த இளைஞர்களையும், அவர்களுடைய குடும்பங்களையும், வீணில் அழிந்த அவர்களின் அறிவாற்றல்களையும் எண்ணி எண்ணி உருகினர். உலகில் எத்தனையோ அறிஞர்களும் கலைஞர்களும் தொண்டர்களும் செய்துவரும் நன்மைகளை

எல்லாம் ஒன்றுசேர்த்துப் போர்ப்பேய் விழுங்கி அழிப்பதை உணர்ந்தார். போர் ஒழிந்தால்தான் எந்த நல்ல தொண்டும் பயன்படும் என்று தெளிந்தார்.

போரில் தோல்வியுற்ற ஜெர்மனியைக் கண்ட போதும் அவர் உற்ற துன்பத்திற்கு அளவில்லை. போர் முடிந்தபிறகுதான் அந்த நாடு படமுடியாத தொல்லைகளுக்கு இரையானது. பஞ்சமும் பட்டினியும் அதை வாட்டி வதைத்தன. போருக்குக் காரணமான அரசியல் தலைவர்கள் எங்கோ இருக்க, ஒன்றும் அறியாத பொதுமக்கள் ஏன் படமுடியாத் துன்பப்பட்டு நைந்து அழியவேண்டும் என்று உள்ளம் புழுங்கினர். அவர்களுள்ளும், ஜெர்மனி நாட்டுக் குழந்தைகளும் பெண்களும் என்ன பாவம் செய்தார்கள், அவர்கள் ஏன் பஞ்சத்தாலும் பட்டினியாலும் வாடவேண்டும் என்றெல்லாம் உருகினர். மற்ற நாட்டு மக்கள் அவர்களுக்கு, ஒரு சிறிதும் உதவி செய்யாமல் கைவிட்டுப் பகை பாராட்டிய கொடுமையை எண்ணி எண்ணி வருந்தினர்.

## உலகத் தொடர்பு

1924-ல் சீனாவிற்குச் சென்று சீன அறிஞர்களின் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார். சீன அறிஞரும் மாணவரும் சாந்திநிகேதனத்திற்கு வந்து கண்டு சென்றனர். 1926-ல் இத்தாலிக்குச் சென்று

அரசரையும் முசோலினியையும் கண்டு அளவளா விஞர். தாகூரின் நூல்களில் இத்தாலியில் மொழிபெயர்க் கப்பட்ட எல்லாவற்றையும் படித்திருப்பதாக முசோ லினி தெரிவித்தாராம். இத்தாலியின் அறிஞர்களையும் கவிஞர்களையும் கண்டு பழகியதில் ஏற்பட்ட மகிழ்ச்சி யைவிட, அந்த நாட்டுப் பள்ளிக்கூடச் சிறுவர்களைக் கண்டு பேசியதிலேயே பெரிய மகிழ்ச்சி கொண்டார். அவர்களில் பலர் தம் நோட்டுப்புத்தகங்களில் தாகூ ரைப் பற்றிக் கட்டுரைகளும் ஓவியங்களும் எழுதிவைத் திருந்து கொடுத்தார்கள். அந்தப் புத்தகங்களை எடுத்துக்கொண்டுவந்து தம் வாழ்நாள் வரையில் தாகூர் காப்பாற்றினர்.

1930 - ல் கவிஞர் ரஷ்யநாட்டிற்குச் சென்ருர். அங்கிருந்து அவர் கண்டவற்றை எல்லாம் கடிதங் களில் எழுதினர். அந்தக் கடிதங்கள் தனி நூலாக வெளியிடப்பட்டன. ரஷ்ய நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அவர் மிகமிக வியந்து போற்றினர். பத்து ஆண்டுகளில் முன்னேறிய புதுமையைக் கண்டு பாராட்டினர். ரஷ்யச் சிறுவர்களின் கல்வி முறையை யும் ஆராய்ந்தார். எல்லோருக்கும் கல்வி பெறும் வாய்ப்பு இருத்தலையும், விருப்பமான தொழிலை மேற் கொள்ளும் உரிமை இருத்தலையும் அறிந்து களித்தார்.

## ஒப்பற்ற பண்பு

தாகூரின் வாழ்க்கையை உயர்த்திய பண்புகள் பல; ஆயினும் அவருடைய தனிப் பெரும் பண்பு என்று கூறத்தக்கது எல்லோரிடத்திலும் அன்பு செலுத்தும் பரந்த மனப்பான்மையே ஆகும். அன்பு செலுத்தல் என்றால், தமக்கு உறவினராகவும் நண்பராகவும் உள்ளவரிடத்துச் செலுத்தும்அன்பை எண்ணி அன்பு மிக்கவர் என்று கூறிவிடலாகாது. எங்கு இயல்பாக அன்பு செல்வதில்லையோ அங்கு அன்பு செலுத்துவதே சிறப்பாகும். ஒருவர் தம் மனைவி மக்களிடத்துக் கொண்ட அன்பைப் பார்த்து அவரை அன்புடையவர் எனப் புகழ்வதில் பயன் இல்லை. இவ்வாறு ஆராய்ந்தால், தாகூரின் அன்புடைமை நன்கு விளங்கும். அவருடைய அன்பின் மிகுதியால் அவர் எவரையும் வெறுக்கவோ பகைக்கவோ முடியவில்லை.

இதனால் தாகூருக்கு விருப்பு வெறுப்பு இல்லை என்பது கருத்து அன்று. அவருக்கும் விருப்பு வெறுப்புக்கள் இருந்தன. உண்மையாக ஆராய்ந்தால், மற்றவர்களை விடக் கலைஞருக்கு விருப்பு வெறுப்புக்கள் மிகுதியாக இருக்கும்; ஆழ்ந்த உணர்ச்சிகளாக நீடித்து நிற்கும். கலை என்பது உள்ளத்து உணர்ச்சிகளை வளர்த்துப் பண்படுத்துவது. ஆகையால், மற்றவர்களைவிடக் கலைஞர்கள் உணர்ச்சி மிக்கவர்களே. வேறுபாடு மிகுதியாக

உண்டு. மற்றவர்களின் உணர்ச்சி எளியவைகளாக இருக்க, கலைஞர்களின் உணர்ச்சிகள் சிறந்தவைகளாக இருக்கும்; மற்றவர்களின் உணர்ச்சிகள் மேற்போக்காகத் தோன்றி மறைய, கலைஞர்களின் உணர்ச்சிகள் உள்ளத்தின் ஆழத்தில் வேரூன்றி நிற்கும். ஆகையால், தாகூரின் உள்ளத்திலும் விருப்பு வெறுப்பு உணர்ச்சிகள் மிக்கிருந்தன.

கலைஞர் தாகூரின் உள்ளத்தில் தனித்தனி ஆட்கள்மேல் வெறுப்பு உணர்ச்சி தோன்ற இடமில்லை. அவர் மக்கள் எல்லோரையும் விரும்பினார்; எவரையும் வெறுக்கவில்லை. தமக்கு நேர்மாறான கொள்கைகளை உடையவர்கள் மீதும் வெறுப்புக் கொள்ள அவரால் முடியவில்லை. தம்மைப் பழித்துத் தூற்றியவர்களையும் அவரால் பகைத்துத் தள்ள முடியவில்லை. ஆனால் கொள்கை என்றும் நெறி என்றும் ஆராயுமிடத்தில் தாகூர் மிக வன்மையான விருப்பு வெறுப்புக் கொண்டிருந்தார். அவர் ஆங்கிலேயரை வெறுக்கவில்லை; ஆனால் ஆங்கிலேயரின் கொடுங்கோல் ஆட்சியை மிக மிக அழுத்தமாக வெறுத்துக் கடிந்தார். பகைவர்க்கும் இன்னா செய்யாத அன்பு நெறியை அவர் மிக விரும்பினார்; இன்னா நெறியை மிக வெறுத்தார்; அன்பு நெறியைப் போற்றாமல் தவறிய இயக்கத்தைக் கடிந்தார்; ஆனால் அந்த இயக்கத்தில் சேர்ந்து உழைத்த

வங்கத்து இளைஞர்களின் மேல் சீற்றங் கொள்ள அவ ரால் முடியவில்லை.

## இருபெருஞ் சுடர்கள்

காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கி, வழக்கறிஞர்முதல் மாணவர்வரையில் எல்லோரையும் போராட்டத்திற்கு முன்வருமாறு அழைத்தபோது தாகூரின் மனம் வருந்தியது. மாணவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து கல்லூரிகளை விட்டு வெளியேறிப் போராடுவதை அவர் வெறுத்தார்; கடிந்து அறிவுரையும் கூறினர்; அதற்காக மாணவருலகமும் அவரைப் பழித்தது. அவர் காந்தியடிகளின் முறையை வெறுத்தாரே அல்லாமல் அவரைச் சிறிதும் வெறுக்கவில்லை; அவருடைய தன்னலமற்ற தியாக வாழ்வைப் போற்றிப் பாராட்டினர்.

காந்தியடிகள் இராட்டையால் நூல் நூற்றுக் கதர் அணிய வேண்டும் என்று அதை ஓர் இயக்கமாக நடத்தியதையும் தாகூர் வெறுத்தார்; குறைகூறினர்; கட்டுரைகளும் எழுதினர். "கையால் நூல் நூற்று ஒரு நாட்டின் விடுதலைக்கு வழி தேட முடியுமா? எச்சில் துப்பி ஏரியை நிரப்ப முடியுமா?" என்றும் எழுதினர். ஆனல் அந்தக் கொள்கை காரணமாகக் காந்தியடிகளை வெறுக்கவில்லை. அதற்கு மாருக அவ

ருடைய தூய வாழ்வையும் அறநெறியையும் மிகப் போற்றுவதற்கு அறிகுறியாக, "மகாத்மா" என்ற பட்டம் சூட்டி உலகறியப் புகழ்ந்தார்; ஒரு முறை அவர் சாந்திநிகேதனத்திற்கு வந்தபோது தாமே கதர் அணிந்து அவரை வரவேற்றார். கொள்கையில் இவ்வளவு உறுதியுடைய கவிஞர், அன்போடு பழகும் போது குழந்தையிலும் குழந்தையாய் விளங்குவதைக் கண்டு எல்லோரும் வியந்தார்கள்.

காந்தியடிகளும் கவிஞர்தாகூரும் ஆகிய இரு பெருந் தலைவர்களின் வாழ்க்கையும் உலகத்தின் மணி விளக்குகளாக ஒளிர்வதற்குக் காரணம் இந்த ஒப்பற்ற பெரும்பண்புதான். கொள்கையில் மிக மிக உறுதி கொண்டு உயிரையும் பொருட்படுத்தாமல் வாழ்ந்த சான்றோர்கள், பகைவர்க்கும் தீங்கு எண்ணாத தூய நெஞ்சினராய் ஒருவரை ஒருவர் வெறுப்பது என்பதைக் கனவிலும் கருதாமல் வாழ வல்லவர்கள் என்பதற்கு இவர்களின் வரலாறு சிறந்த சான்று ஆகும்.

காந்தியடிகளும் தாகூரும் இருவேறு வகையில் தொண்டு ஆற்றிய போதிலும், ஒருவர்க்கு ஒருவர் துணையாகவே விளங்கினார்கள். தாகூரின் சாந்திநிகேதனத் தொண்டு பொருள்முடையால் தடைப்படாமல் காக்க வேண்டும் என்று காந்தியடிகள் முயன்றது போலவே, காந்தியடிகளின் அரசியல்கிளர்ச்சி ஆங்கி

லேயரின் அடக்குமுறையால் நலிவுறக்கூடாது என்று தாகூர் பாடுபட்டார். தாகூரின் எழுபதாம் ஆண்டு நிறைவுவிழா 1931 - ல் இந்தியா முழுவதும் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு ஏற்பாடாயிற்று. உல கத்து அறிஞர் எல்லோரும் சேர்ந்து கட்டுரைகள் எழுதி நினைவுமலர் ஒன்று வெளியிட்டார்கள். கல் கத்தா நகர மண்டபத்தில் பெருந்திரளாக மக்கள் கூடிய கூட்டத்தில் அந்த நினைவுமலரைத் தாகூருக்கு வழங்கினார்கள். தாகூர் எழுதிய நாடகங்களிலும் சில நடிக்கப்பட்டன. அன்று அவ்வாறு தொடங்கப்பட்ட விழா இன்னும் பல நாட்கள் தொடர்ந்து நடைபெற நிகழ்ச்சிமுறையும் இருந்தது. ஆனால் லண்டனில் வட்டமேசை மாநாட்டிலிருந்து திரும்பியதும் காந்தி யடிகள் 1931-ஜனவரி 5-ல் சிறைப்பட்ட செய்தி எட் டியவுடனே, மகிழ்ச்சியின் ஆரவாரத்திற்கு இடையே இருந்த தாகூர் மனவேதனை உற்றார்; கலங்கி வருந் தினார்; தமக்காக எந்த வகையிலும் எங்கும் விழா நடத்தக் கூடாது என்று அறிவித்துத் துயர நாளாக மாற்றிவிட்டார். எரவாடா சிறையில் காந்தியடிகள் உண்ணாநோன்பு கொண்டு போராடியபோது, தாகூர் பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்று உண்ணாநோன்பு முடியும்வரையில் உடனிருந்தார். இவ்வாறு இரு பெருந் தலைவரும் மாறாத அன்புடையவர்களாய் நடந்து

கொண்டு இந்திய நாட்டின் பெருமைக்குக் காரணமாக நின்று உலகிற்கு வழிகாட்டிச் சென்றூர்கள்.

## உள்ளமும் உடம்பும்

நீண்ட ஆயுள் வாழும் ஒருவர் உலகில் காணும் காட்சிகளை - தம் உற்ருரும் நண்பருமான பலர் இறந்து மறையும் காட்சிகளை - தாகூரும் கண்டார். அவருடைய முதுமையில் ஒருவர்பின் ஒருவராகப் பலர் உலக வாழ்வை விட்டுச் செல்வதை அவர் தொடர்ந்து கண்டு உருகினர். அவருடன் பிறந்தவர்கள் அண்ணன் மாரும் தமக்கையரும் ஒவ்வொருவராகத் துஞ்சினர் கள். ஒரே ஒரு சகோதரி மட்டும் உடன்பிறப்பாக எஞ்சினர். மனைவியும் மூன்று மக்களும் முன்னமே மறைந்துவிட்டார்கள். ஒரு மகனும் ஒரு மகளுமே உயிருடன் நின்றூர்கள். பேரன் ஒருவனும் பேர்த்தி ஒருத்தியும் இருந்தார்கள். அந்தப் பேரனும் 1932-ல் ஜெர்மனிக்குப் படிக்கச் சென்ற இடத்தில் இறந்தான். பியர்ஸன் என்ற ஆங்கில நண்பரும் ஒரு ரயில் விபத் தால் இறந்துவிட்டார். உற்ற தோழராய் விளங்கிய சான்ருேர் சி. எப். ஆண்ட்ரூஸ் என்னும் ஆங்கிலேயரும் 1940-ல் நோய்வாய்ப்பட்டு இறந்தார். உறவினரையும் நண்பரையும் இழந்து தனித்து வருந்திய தாகூர், இந்திய அரசியலிலும் இருள்சூழ்ந்த நிலையைக் கண்டு வாடினர். உரிமைஉரிமை என்று எல்லாத் துறையிலும் உரிமையை

நிலைநாட்ட முனைந்த அவருடைய தூய நெஞ்சம், இந்திய நாட்டின் உரிமைக்காக ஏங்கியது. இந்த அளவோடு அவருடைய கவலை நிற்கவில்லை. இரண்டாவது உலகப்போர் மூண்டு, ஐரோப்பிய நாடுகள் கலங்கிக் குழம்பியதை நினைந்து நினைந்து அவருடைய உள்ளம் நைந்தது. அவருக்கு ஐரோப்பா எங்கும் எல்லா நாடுகளிலும் நெருங்கிய நண்பர்கள் பலர் இருந்தார்கள். அந்த நண்பர்கள் என்ன ஆனார்களோ என்றெல்லாம் அவர் எண்ணி எண்ணி உருகினார்.

அவருடைய உள்ளம் உலகத் துயரால் நலிய, உடல் முதுமைத் துன்பத்தால் நலிந்து தளர்ந்தது. அடிக்கடி நோய் வந்து தாக்கியது; தொடர்ந்து பல நாள் கவிஞரின் உடலைப் படுக்கையில் கிடத்தியது. ஒவ்வொரு முறையிலும் நண்பர்கள் அவரைக் குறித்துக் கவலைப்பட்டார்கள். 1941-ல் எண்பதாம் ஆண்டு விழாவும் நடைபெற்றது. விழாக் கூட்டம் ஒன்றிற்கும் கவிஞர் போக முடிந்தது; அந்தக் கூட்டத்தில் "நாகரிகத்திற்கு உற்ற நெருக்கடி" என்ற பொருள் பொதிந்த அறிவுரையை உலகிற்கு உணர்த்தினார்.

உடலின் தளர்வு மிகுந்துகொண்டே சென்றது. நண்பர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து இயன்றன எல்லாம் செய்தார்கள். சாந்திநிகேதனத்தை விட்டுக் கல்கத்தாவிற்குச் சத்திரசிகிச்சைக்காகக் கொண்டு

செல்லப்பட்டார். சிகிச்சையும் முடிந்தது. கவிஞரின் ஆவி அமைதியாகப் பிரிந்தது. 1941 ஆகஸ்டு 7 ஆகிய நாள் உலகம் அழுத நாட்களில் ஒன்றுயிற்று.

## குழந்தை நெஞ்சம்

உயர்ந்த சான்ேறார்க்குத் தம்மைப் பற்றி உயர்வான எண்ணம் தோன்றுவதில்லை; தாமும் மற்ற மக்களைப் போன்றவர்களே என்பது அவர்களின் உள்ளம் உணரும் உண்மை. அதனால்தான் அவர்கள் பிறரிடம் எளியவராகப் பழகும் குழந்தை நெஞ்சம் பெறுகின்றார்கள். தாகூரும் மக்களின் புகழுரைகளைக் கேட்கும்போதும், போற்றுதல்களைக் காணும்போதும் அவற்றை வெறுத்தார். மக்கள் இந்தியாவில் போற்றியது போலவே, ஐரோப்பாவிலும் அவரைப் போற்றிக் கொண்டாடினார்கள். ஆனல், அப்போதும் அவர் தம்மைப் பற்றிப் பெருமையான எண்ணம் கொள்ளவில்லை. " அவர்கள் என்னைப் பற்றிக் கொண்ட கருத்துக்கள் உண்மை அல்ல. அதற்காக நான் வருந்துகின்றேன். என் நிலைமைக்காகவும் வருந்துகின்றேன். என்னுடைய பழைய மூலையில் ஒதுங்கி ஓய்வுகொள்ள வேண்டுமென்ற வேட்கையே இதனல் எனக்கு ஏற்படுகின்றது. மற்ற மக்களின் மயக்கமான கருத்துக்களால் அமைந்த உலகத்தில் வாழ்வதில் எனக்கு வெறுப்புத் தோன்றுகின்றது. என் ஆடையின் கரைகளைத் தொடு

வதற்காகவும் வணக்கத்தோடு அதை முத்தமிடுவதற் காகவும் மக்கள் என்னைச் சூழ்ந்து நெருக்குவதைக் கண் டிருக்கிறேன். அது எனக்கு வருத்தத்தையே விளைக் கின்றது. நான் அவர்களில் ஒருவனே, அவர்களைவிட உயர்ந்தவன் அல்லன், நான் வணங்கத் தகுந்த நன் மக்கள் அவர்களிடையே பலர் இருக்கின்றார்கள் என்ற உண்மையை அவர்களுக்கு நான் எப்படி உணர்த்து வேன்?" என்று அவர் ஐரோப்பாவிலிருந்து எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.' இதனால் தாகூரின் பெருந்தன்மை புலப்படுகின்றது.

வளர்ந்த மக்களிடத்தில் பழகும்போது இருந்த இந்தப் பளிங்கு நெஞ்சத்தின் அன்பே, இளங்குழந்தை களிடம் பழகும்போதும் அவர்க்கு இயல்பாக இருந் தது. "பிறைமதி" என்ற தலைப்பில் அவர் எழுதித் தொகுத்துள்ள பாடல்கள் பலவும் சிறந்த அன்பைக் காட்டுகின்றன; குழந்தைகளிடம அவர் பழகிய முறை யையும் பழகி உணர்ந்த உண்மைகளையும் விளக்கு கின்றன. விளையாடும் குழந்தைகளிடம் மட்டும் அல்லா மல், பச்சிளங் குழந்தைகளிடமும் அவர் பேரன்பு செலுத்திப் பழகியிருத்தலை அந்தப் பாடல்களால் உணரலாம்.

ஐரோப்பாவில் ஸ்ட்ராஸ்போர்க் என்னும் நகரத்தில் தங்கியிருந்தபோது, அந்த வீட்டில் இருந்த இளங் குழந்தை ஒன்று அவருடைய கருத்தைக் கவர்ந்தது.

அதன் அருகே சென்று அன்போடு பார்த்த கவிஞரின் மூக்குக்கண்ணாடியை அந்தக் குழந்தை எடுக்க முயன்றது; அதன் பூங்கையின் சிறுவிரல்களால் அந்தக் கண்ணாடியைப் பற்ற முயன்றது. இதைக் கண்டு கவிஞர் உள்ளம் பூரித்து, அங்கிருந்து எழுதிய கடிதத்திலும் குறிப்பிட்டார். "இந்த அழகு மிக்க இளங் குழந்தையின் சிறுவிரல்கள் என் மூக்குக்கண்ணாடியின் புதுமையை ஆராய்ந்து கண்டுபிடிக்க விரும்புகின்றன" என்று எழுதினார். இவ்வாறு அவர் வாழ்நாள் முழுதும் குழந்தையைப் போற்றும் குழந்தையாக விளங்கினார். ஒருமுறை அரசியல் கிளர்ச்சிக்காரரின் ஆத்திரத்திற்கும் பத்திரிகைகளின் பழிப்பிற்கும் ஆளானபோது அவர் ஆறுதலை நாடி விழைந்த இடம் குழந்தைகளின் உலகமே ஆகும். "இந்த உலகிலிருந்து ஒதுங்கிக் குழந்தைகளின் இடையிலே வாழ முயல்கின்றேன். குழந்தைகளுக்கு ஒரு நல்ல இயல்பு அமைந்திருக்கின்றது. பயன் இல்லாத பொருள்களையும் மதிப்பு இல்லாத மக்களையும் தம்முடன் வைத்துக்கொண்டு மகிழ்ச்சி அடையும் திறன் குழந்தைகளுக்கு இருக்கின்றது" என்று தெரிவித்தார்.

## உள்ளத்தில் உலகம்

மக்கள் தவிர மற்ற உயிர்கள் வாழும் வாழ்வெல்லாம் உடலால் வாழும் வாழ்வே ஆகும். மக்கள் உட

லால் வாழும் அளவிற்கு உள்ளத்தாலும் வாழ்பவர்கள். அறிவும் உணர்வும் பண்படப் பண்பட, மக்கள் உடலால் வாழ்வதைவிட உள்ளத்தால் வாழ்வதே மிகுதியாகின்றது. மாக்களுக்கு உணவும் துணையும் கிடைத்து உயிர்க்கு அச்சம் இல்லையானால், வாழ்க்கையின்பம் முற்றுப் பெறுகின்றது. ஆனால் மக்களுக்கோ உணவு முதலானவை எவ்வளவு கிடைத்தபோதிலும், உள்ளத்தால் எவ்வெவற்றையோ நினைந்து ஏங்கும் ஏக்கம் இருக்கின்றது. உடலின் தேவைகள் நிரம்பிவிட்டால் மாக்களின் வாழ்க்கை நிரம்பிவிடுகின்றது. ஆனால் உள்ளத்தின் தேவைகளே மக்களின் வாழ்க்கையில் கவலையை வளர்க்கின்றன; உள்ளத்தின் அமைதியும் தெளிவுமே மக்களுக்கு உண்மையின்பத்தைத் தருகின்றன.

மற்ற மக்களைவிடக் கலைஞர்க்கு உள்ள சிறப்பியல்பு அவர்கள்உள்ளமே உலகமாக வாழும் கற்பனையாற்றலே ஆகும். ஆகவே, தாகூரைப் போன்ற பெருங்கலைஞரின் உண்மை வரலாறு, அவர்களுடைய பிறப்பு வளர்ப்பிலும் இல்லை ; அவர்களுடைய செயல்களிலும் இல்லை; அவர்களின் உள்ளம் உணர்ந்த உணர்வுகளிலேயே வாழ்க்கையின் பெரும்பகுதி அமைவதாகக் கூறவேண்டும். இந்த அடிப்படை கொண்டு தாகூரின் வாழ்க்கையை ஆராய்வோர், அவருடைய கவிதைகளையும்

கதைகளையும் கடிதங்களையும் நாடகங்களையுமே நாடிக் காணவேண்டும்.

ஓய்வும் பரந்த இடமுமே நாம் விரும்பும் சிறந்த பேறுகள்; ஏனெனில், நாம் புதியன படைக்கும் படைப்பாளிகள். நம்முடைய உண்மையான விடுதலை, நாமே படைத்துக்கொள்ளும் உலகத்தில்தான் உள்ளது. நம்முடைய படைப்பான அந்த உலகத்தில்தான் நம் உள்ளம் தடையின்றித் தொழிலாற்ற முடியும்; அங்குத்தான், நம் உயிரும் அரியணையில் வீற்றிருந்து ஆட்சிபுரிகின்றது.

என் வாழ்க்கை முழுதும் நான் தனித்தே வேலை செய்துவந்திருக்கிறேன். என் வாழ்க்கையும் என் வேலையும் ஒன்றுபட்டிருப்பதே அதற்குக் காரணம். நான் ஒரு மரம்போல் வாழ்க்கையை அமைத்துக்கொண்டிருக்கிறேன். மரம், தன் இயற்கையான வளர்ச்சியாலேயே தன் காழ் முதலியவற்றைச் செய்துகொள்கின்றது; அதற்காக ஓய்வு, போதிய இடம், சூரிய ஒளி, காற்று ஆகியவற்றை அது நாடுகின்றது; ஆனால் செங்கல்லையும் சுண்ணும்பையும் வீடு கட்டும் தொழிலாளியையும் எஞ்சினீயரையும் நம்பி அது வாழ்வதில்லை.

நிலைத்த ஏற்பாடு என்பது வாழ்வையும் உரிமையையும் விற்றுப் பெறவேண்டிய ஒன்றாக இருக்கின்றது. பறவை தானாகக் கட்டும் கூடு நிலைத்து நிற்பதில்லை; ஆனால் அதைப் பிடித்து அடைக்கும் கூண்டு நிலையானதுதான்.

இன்று, உலகத்தில் எங்கும் வாழ்க்கை இயல்பான நிலையில் இல்லை. எங்குப் பார்த்தாலும் சிக்கலான பிரச்சினைகள் மலிந்துள்ளன. இன்றைய உலகநிலை, பாடும் கலைஞர்களைப் பாட விடுவதில்லை; செய்திகளை முழங்கச் செய்கின்றது. ஆனால், என் வாழ்க்கை, துருவத்தில் உள்ளது போன்ற நிலையான கோடையாக, முடிவற்றதும் இனிமையற்றதுமான ஒளி மிக்க பகலாக, ஓய்வற்ற கடமைகள் மிகுந்ததாக இருக்கவேண்டுமா? எல்லையற்ற பெருவாழ்வின் வாயிலை என் மனக்கண்ணின்முன் திறக்கும் விண்மீன்கள் ஒளிரும் இரவு எனக்கு அமையாதோ?

கடிதங்களில் ஆங்காங்கே காணப்படும் இந்த வாக்கியங்கள் அவர் உள்ளத்தில் நிறைந்திருந்த கலையுணர்வையும் பாடும் பறவையாக வாழ விரும்பிய வேட்கையையும் எடுத்துக்காட்டுகின்றன. பாடல்களும் அவ்வாறே அவர் வாழ்ந்த வாழ்வையும் விடைபெற்ற முறையையும் விளக்குகின்றன.

## கவிஞர் வாழ்வு

எங்கே மனம் அச்சமற்றிருக்கிறதோ, தலை நிமிர்ந்திருக்கிறதோ
எங்கே அறிவு உரிமையுடனிருக்கிறதோ
எங்கே உலகம் குறுகிய குடும்ப எல்லைகளால் துண்டு துண்டாகப் பிளவுபடாதிருக்கிறதோ

எங்கே உண்மையின் ஆழ்ந்த அடிப்படையிலிருந்து
சொற்கள் பிறக்கின்றனவோ
எங்கே சலியாத உழைப்பு விழுமிய நிலையை நோக்கி
நீளுகிறதோ
எங்கே பகுத்தறிவு என்னும் தெளிந்த ஓடை மூடப்
பழக்க வழக்கம் என்னும் வறண்ட பாலையில்
சுவறிப்போகாதிருக்கிறதோ
எங்கே என்றும் விரிந்து நோக்கும் எண்ணத்திலும்
செயலிலும் மனத்தை நீ முன்னின்று அழைத்
துச் செல்கிருயோ
அங்கே அந்த உரிமையுள்ள இன்ப உலகத்தில், என்
தந்தையே, என் நாடு விழிப்புறுக.

(கீதாஞ்சலி - 35)

## கவிஞர் விடைபெறுதல்

மரணம் உன் வாழ்வின் கதவைத் தட்டும் அந்த நாளில் நீ அதற்கு என்ன நல்குவாய் ?

ஆ ! என் விருந்தாளியாக வந்த மரணத்திற்குமுன் என் வாழ்வு என்னும் நிறைகுடத்தையே வைத்திடுவேன் ; வந்த விருந்தாளி வெறுங்கையுடன் திரும்பிப் போக விடமாட்டேன்.

மரணம் என் வாழ்வின் கதவைத் தட்டும் இறுதி நாளில், மரணத்தின் முன்னிலையில் மழைக்காலப் பகல்களுக்கும் வேனில்கால இரவுகளுக்கும் உரிய இனிய தேனையெல்லாம் வைத்திடுவேன்; என் வாழ்வில் முயன்று தேடிய பயனை எல்லாம் வைத்திடுவேன்.

(கீதாஞ்சலி - 90)

ஓ மரணமே! என் மரணமே! வாழ்வின் இறுதிப் பேறே! வருக, வந்து என் செவியருகே மெல்லச் சொல்லுக.

உன்னை எதிர்பார்த்து ஒவ்வொரு நாளும் நான் காத்துவந்தேன்; ஏன் எனில், உன்பொருட்டாகவே நான் வாழ்வின் இன்ப துன்பங்களைப் பொறுத்து வந்தேன்.

யானாக இருப்பவை, என்னிடம் இருப்பவை, என் நம்பிக்கை, என் அன்பு எல்லாம் யாரும் அறியாமல் உன்னை நோக்கி என்றும் சென்றுகொண்டிருக்கின்றன. உன் கண்களின் இறுதிப் பார்வை ஒன்றுபோதும்; என் வாழ்வு என்றும் உன்னுடையதாகிவிடும்.

(கீதாஞ்சலி - 91)

நான் விடைபெற்றுக்கொண்டேன். என் சகோதரர்களே, விடை கொடுங்கள். எல்லோர்க்கும் வணக்கம் செலுத்தி விடைபெற்றுப் புறப்படுகின்றேன்.

இதோ என் இல்லத்தின் சாவிகளை எல்லாம் திரும்பக் கொடுத்துவிடுகின்றேன் ; என் வீடு பற்றிய உரிமைகளை எல்லாம் விட்டுவிடுகின்றேன். உங்களிடமிருந்து இறுதியான அன்புமொழிகளே வேண்டுமென்று கேட்கின்றேன்.

நாம் நெடுங்காலம் அடுத்துவாழ்வோராக இருந்தோம். ஆனல் நான் கொடுக்கக் கூடியதைவிட மிகுதியாகப் பெற்றுக்கொண்டேன். இப்போதோ பொழுது விடிந்துவிட்டது ; என் இருண்ட வீட்டை ஒளிபெறச் செய்திருந்த விளக்கோ அணைந்துவிட்டது. புறப்பட ஆணை பிறந்துவிட்டது ; யானும் பயணத்திற்கு ஆயத்தமாக இருக்கின்றேன்.

(கீதாஞ்சலி - 93)

இந்த வாழ்வின் வாயிலுக்குள் நான் சேர்ந்தது எப்போது என்பது எனக்குத் தெரியவில்லை.

நள்ளிரவில் காட்டில் மலரும் அரும்புபோல் இந்த வியப்பான சூழலில் நான் தோன்றுமாறு செய்த சக்தி எதுவோ ?

காலையில் ஒளியைக் கண்டபோது, நான் இந்த உலகத்திற்கு அயலான் அல்லேன் என்பதை நொடிப் பொழுதில் உணர்ந்தேன். பெயரும் வடிவும் அற்ற

அந்தப் பரம்பொருள் என் தாய்வடிவாக இருந்து என்னைத் தன் கையில் அணைத்துக்கொண்டது.

அதுபோலவே, மரணத்திலும், நான் என்றும் அறிந்த ஒன்றாகவே, உணரமுடியாத அந்தப் பரம் பொருள் என்முன் தோன்றும். இந்த வாழ்வை யான் விரும்புகின்றேன் ஆகையால், மரணத்தையும் அவ்வாறே விரும்புவதாக என்று உணர்கின்றேன்.

தாய் தன் குழந்தையை வலது மார்பிலிருந்து எடுத்திடும்போது அது அழுகின்றது; ஆனால் அடுத்த நொடியிலேயே இடதுமார்பில் அமைந்து ஆறுதல் பெறுகின்றது.

(கீதாஞ்சலி - 95)

யான் இங்குக் கண்டது ஒப்புயர்வற்ற மிகச் சிறந்த காட்சி; யான் இங்கிருந்து செல்லும்போது இது என் பிரிவுமொழியாக இருக்கட்டும்.

பேரொளிக் கடலில் மலரும் இந்தத் தாமரையில் பொதிந்துள்ள தேனை யான் நுகர்ந்தேன். ஆகவே, நற்பேறு பெற்றேன். இது என் பிரிவுமொழியாக இருக்கட்டும்.

கணக்கற்ற உருவங்கள் நிரம்பிய இந்த ஆடலரங்கில், என் ஆடலை ஆடி முடித்தேன்; உருவம் ஒன்றும் அற்ற ஒருவனையும் நான் கண்டுவிட்டேன்.

உற்று உணரமுடியாத அவனுடைய உணர்த்து தலால் என் உடம்பு முழுதும் எல்லா உறுப்புக்களும் இன்பஉணர்வு பெற்றுவிட்டன. இங்கு முடிவு எய்து மானல், அது எய்துவதாக. இது என் பிரிவுமொழி யாக இருக்கட்டும்.

(கீதாஞ்சலி - 96)